Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மங்கள நிகழ்வுகளுக்கு மங்களகரமான ஸ்தாபனம்

முற்றிலும் நவீனமயப்படுத்தி, குளிரூட்டப்பட்ட காட்சியறை



குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை,
கிளிநொச்சி.

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆனி- 02 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-அவ்வல் 08 (16.06.2005) வியாழக்கிழமை இதழ்:260

# அரசிலிருந்து விலகியது ஜே.வி.பி.; இன்று உத்தியோகபூர்வ அறிவிப்பு!

கொழும்பு —

விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் முடிவிலிருந்து விலகிக்கொள்வதற்கு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு வழங்கப்பட்ட காலக்கெடு நேற்று நள்ளிரவுடன் முடிவுற்றதை அடுத்து - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

இதுதொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பும் - ஜே.வி.பியின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்தும் இன்று காலை நடைபெறவுள்ள செய்தியாளர் மாநாட்டில் வெளியிடப்படுமென ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் இன்று அதிகாலை நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டிலிருந்து விலகிக்கொள்வதற்கு நேற்று நள்ளிரவு வரை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஜே.வி.பி. வழங்கிய காலக்கெடு முடிவுற்றதை அடுத்தே ஜே.வி.பி. அரசாங்கத்திலிருந்து வெளியேற முடிவு செய்துள்ளது.

ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லை. இன்று காலை 9 மணிக்கு கொழும்பு தேசிய நூலகத்தில் நடைபெறவுள்ள செய்தியாளர் மாநாட்டில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பகிரங்க விவாதம் நடத்த சந்திரிகா முன்வருவாரா?

### விமல் வீரவன்ச கேள்வி



கொழும்பு —

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான நேரடி தொலைக்காட்சி விவாதத்துக்கு ஜனாதிபதி சந்திரிகா முன்வருவாரா என்று பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச.

தேசப்பற்று தேசிய இயக்கத்தினரது நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசியபோதே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது -

ஜனாதிபதி சந்திரிகா (12 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று புதிய அரசாங்கம் சோமவன்ச கூறுகிறார்!



கொழும்பு —

நள்ளிரவுக்கு முன்னர் பொதுக்கட்டமைப்பு யோசனையை அரசாங்கம் கைவிடாவிட்டால், இன்று கூட்டணி அரசாங்கம் இருக்காதென ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர் :

இன்று காலை புதிய கூட்டணி அரசாங்கம் ஒன்று உருவாக்கப்படும். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவேண்டுமானால் நாடாளுமன்றப் பிரதிநிதிகளை கொண்ட சபை ஒன்று அமைக்கலாம்.

ஆனால், பொதுக்கட்டமைப்பு யோசனைகளை ஏற்கமுடியாது. பொதுத்தேர்தலுக்கு நாடு தயாராக இல்லை (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் செயலைக் கண்டித்து சாவகச்சேரியில் உண்ணாவிரதம்!

யாழ்ப்பாணம் —

## உண்ணாவிரதம் இருந்த பிக்குவை பொலிஸார் தூக்கிச் சென்று வைத்தியசாலையில் அனுமதிப்பு

# அரசின் செயலைக் கண்டித்து சாவகச்சேரியில் உண்ணாவிரதம்!




யாழ்ப்பாணம் —

சமாதானப் பேச்சுக்கள் என்ற போர்வையில் தமிழ் மக்கள் மீது அரசாங்கம் மறைமுக யுத்தமொன்றை நடத்தி, போராளிகளையும் தேசப்பற்றாளர்களையும் ஊடகவியலாளர்களையும் பொதுமக்களையும் கொலைசெய்வதைக் கண்டிக்கும் வகையில் நேற்று சாவகச்சேரியில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை 9 மணியளவில் சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு அருகில் தென்மராட்சி வணிகர்மன்றத் தலைவர் வி.மகாலிங்கம் தலைமையில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

உண்ணாவிரதப் போராட்டத்தை சிவநாயகம் குருக்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

காவி உடையே ஏன் இவ்வளவு (12 ஆம் பக்கம் பார்க்க)

# புத்தூர் கொலை வழக்கில் இருவருக்கு மரணதண்டனை

## ஜூரி சபை விசாரணையில் தீர்ப்பு

யாழ்ப்பாணம் —

யாழ்.மேல் நீதிமன்றத்தில் நேற்று ஆறாவது நாளாக நடைபெற்ற இராஜரட்ணம் உதயகுமார் என்பவரின் கொலை தொடர்பான வழக்கில் - ஜூரி சபை விசாரணையின் இறுதியில் இரண்டு எதிரிகளுக்கும் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

2001 ஆம் ஆண்டு ஆனி மாதம் புத்தூரில் இராஜரட்ணம் உதயகுமார் என்பவரைக் கொலை செய்ததாக அந்த இடத்தைச் சேர்ந்த பூதத்தம்பி முருகானந்தன், பூதத்தம்பி மகேந்திரன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு – அம்பாறையில் துப்பாக்கிச் சூட்டில் மூவர் பலி!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் நேற்று மாலை இடம்பெற்ற இருவேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் மூவர் கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு ஆரையம்பதியில் நேற்று மாலை 5.55 மணியளவில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஆரையம்பதி கோவில்குளத்தைச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# உண்ணாவிரதம் இருந்த பிக்குவை பொலிஸார் தூக்கிச் சென்று வைத்தியசாலையில் அனுமதிப்பு



கொழும்பு —

பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து - கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த தேசிய பிக்குகள் முன்னணித் தலைவர் தம்பர அமிலதேரரை பொலிஸாரும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரும் பலவந்தமாகத் தூக்கிச்சென்று வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த சனிக்கிழமை தொடக்கம் தம்பர அமிலதேரர் உண்ணாவிரதமிருந்து வந்தார். கடந்த 5 நாட்களாக உண்ணாவிரதமிருந்த இவரது உடல்நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வந்தது.

. மகாநாயக்கர்களின் அனுமதியின்றி பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட மாட்டேன் என ஜனாதிபதி தங்களிடம் உறுதிமொழி வழங்கியிருப்பதால் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடுமாறு உண்ணாவிரதமிருக்

(12 ஆம் பக்கம் பார்க்க)




ExpoAir

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



# யாழ்.குடாநாட்டுப் பகுதிகளில் கள்ள நோட்டு பாவனை அதிகரிப்பு

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் ஐந்நூறு, ஆயிரம் ரூபா போலித் தாள்கள் புழக்கத்தில் இருப்பது வங்கியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டு வருகிறது. இதனால் பொது மக்கள் பணப்பரிமாற்றத்தின் போது அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சங்கானை மக்கள் வங்கியில் ஆயிரும் ரூபா போலித்தாள் ஒன்று நேற்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

அராலி மத்தியைச் சேர்ந்த வங்கியின் வாடிக்கையாளர் ஒருவர் சேமிப்பில் இடுவதற்காக ஒரு தொகையை வங்கியாளரிடம் கொடுத்தபோது இந்தப் போலித் தாள், அங்குள்ள பணம் எண்ணும் இயந்திரம் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த திங்கட்கிழமையும் வாடிக்கையாளர் ஒருவர் தனது சேமிப்பில் இடுவதற்காக கொண்டுசென்ற பணத்தில் ஐந்நூறு ரூபா போலித் தாள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த வாடிக்கையாளர் தான் வட்டுக்கோட்டை மாவடியைச் சேர்ந்த ஒருவருடன் சீட்டுப் பிடித்ததாகவும், தனக்கான சீட்டிற்குரிய இந்தப் பணத்தை அவரிடமேயிருந்து பெற்றுள்ளதாகவும் வங்கி முகாமையாளரிடம் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மக்கள் வங்கி முகாமையாளர் பொன். அச்சுதம்பிள்ளை தெரிவிக்கையில் - இந்தப் போலித்தாளில் உண்மையான தாளில் உள்ள சிங்க அடையாளம் இல்லையென்றும், தாளின் முன்பக்கம் இடதுபுறமாக உள்ள சிங்கப்படம் கொண்ட சதுரத்தின் நிறத்திலும் சிறிதளவு வித்தியாசம் காணப்படுகின்றதென்றும் குறிப்பிட்டார். அத்துடன் பொது மக்கள் ஐந்நூறு ரூபா, ஆயிரம் ரூபா தாள்களைக் கையாளும் போது இவற்றை அவதானித்து கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

இதேவேளை, வலிகாமம் பகுதியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றிலுள்ள பொருட்கள் ஏலத்தில் விற்பனை செய்தபோது அதற்காக வழங்கப்பட்ட பணத்தின் அனேகமான தாள்கள் போலித்தாள்கள் என கண்டறியப்பட்டமை தெரியவந்துள்ளது. இந்தப் பணம் மன்னாரிலிருந்து கெண்டு வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(48)

# விகாரைக்கு வெளியே கட்டடம் கட்டும் பணி இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம் —

யாழ்.நாகவிகாரையில் புதிதாகக் கட்டப்பட்ட கட்டடம் நாகவிகாரைக்கு மூன்று அடி வெளியே வீதியில் கட்டப்பட்டமையினால் மேற்படி கட்டடத்தை கட்டவேண்டாம் என யாழ்.மாநகரசபை உத்தரவிட்டுள்ளது.

யாழ்.நாகவிகாரைக்குச் சொந்தமான காணிக்கு வெளியே கட்டடம் ஒன்று கட்டப்படுவதாக யாழ்.மாநகரசபையினருக்கு மக்களால் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்தே நாக விகாரைக்கு சென்ற மாநகரசபை செயலர், பொறியிலாளர்கள், மேற்படிகட்டடத்தைப் பார்வையிட்டபோது அந்தக் கட்டடம் மூன்றரையடி வெளியே வீதியில் கட்டப்படுவதை கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து மேற்படி கட்டடபணிகளை உடன் நிறுத்துமாறு யாழ்.மாநகரசபையினர் உத்தரவிட்டனர். இந்த உத்தரவை யாழ் நாகவிகாராதிபதி ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மகோற்சவம்

சாவகச்சேரி —

சாவகச்சேரி சரசாலை தெற்கு இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. நாளை வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (25)

# வீடமைப்புக்கான முதல் கொடுப்பனவு இன்று யாழ்.செயலகத்தில் இடம்பெறும்

உடுவில் —

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கான முதலாம் கட்ட கொடுப்பனவு இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் வழங்கப்படவுள்ளது. ஆயிரம் வீடுகளை புனர்நிர்மாணம் செய்யும் திட்டத்தின் கீழ் 14 பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்தும் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வலி வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இளவாலை வடமேற்கில் 15 பேரும், இளவாலை வடக்கில் 10 பேரும், தெல்லிப்பளை கிழக்கில் 19 பேரும், வயாவிளான் கிழக்கில் 19 பேருமாக மொத்தம் 65 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு முதலாம் கட்டமாக ரூபா 50 ஆயிரத்துக்கான காசோலை இன்று வழங்கப்படவுள்ளது.

அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இநத நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர் நிர்மாண திட்டப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(101)

# காணாமற்போன மூவரின் வழக்கு நேற்று யாழ்.நீதிமன்றில் விசாரணை

யாழ்ப்பாணம் —

காணாமற்போனோரின் மூன்று வழக்குகள் நேற்று யாழ். மேலதிக நீதிமன்றில் நீதிவான் ஸ்ரீநிதிநந்தசேகரம் தலைமையில் நடைபெற்றது.

1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனதாகத் தெரிவிக்கப்படும் கமலாதேவியின் மகன், பூதத்தம்பி இராசையாவின் மகள், கோபிகா மல்லிகாவின் கணவர் ஆகியோரின் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீதிமன்றில் கிருசாந்தி குமாரசாமி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார். சாட்சியங் கள் அளித்த சாட்சியத்தை ராஜபக்ஷ ஏற்றுக்கெண்டதனால், ராஜபக்ஷவை குறுக்கு விசாரணைக்குட்படுத்தவில்லை.

கோபிகா மல்லிகாவின் கணவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதாக ஜே.74 கிராம சேவகருக்கும், யாழ். பொலிஸ் நிலையத்துக்கும் முறைப்பாடு செய்து இதற்கான பிரதிகளை வைத்திருந்தபோதும், தனதுவீடு குண்டு வீச்சுக்கு இலக்காகி அனைத்தும் அழிந்துவிட்டன. இதனையடுத்து மேற்படி முறைப்பாட்டுப் பிரதியை கிராமசேவகரிடம் பெறச்சென்றபோது அதனைத் தரமுடியாது என கிராம சேவகர் தெரிவித்தார் என்றும், பொலிஸாரிடம் கேட்டபோது ஐந்து வருடத்திற்கு ஒரு முறை தமது பதிவுகளை அழித்துக்கொள்வதாகவும், அதன்படி தங்களது கணவரின் பதிவும் அழிக்கப்பட்டுவிட்டதாகவும் பொலிஸார் தெரிவித்ததாக கோபிகா மல்லிகா நீதிமன்றில் தெரிவித்தார்.

இதனையடுத்து ஜே. 74 கிராம சேவகரையும், யாழ். பொலிஸாரையும் மேற்படி முறைப்பாட்டுப் பிரதியை நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இதேவேளை, ராஜபக்ஷவை யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

காணாமற்போனோர் தொடர்பான வழக்கு மேல் நீதிமன்றில் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இளைஞர் பரிமாற்ற அலுவலராக ஐந்து பேர் தெரிவாகி உள்ளனர்

யாழ்ப்பாணம் —

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் பரிமாற்றத் திட்டத்திற்கென 5 அலுவலர்கள் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையின் அடிப்படையில் தெரிவாகியுள்ளனர்.

கடந்த 13 ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் இவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். தெரிவானோரின் விபரம் வருமாறு -

கதிர்காமநாதன் கஜேந்திரன் - கரவெட்டி, தமிழினி நற்குணன் - சுன்னாகம், சொக்கலிங்கம் புருசோத்தமன் - மல்லாகம், மேரிபற்றீசியா ஞானசீலன் - திருநகர் யாழ்ப்பாணம், ராதாகிருஷ்ணன் மதிமோகன் - மல்லாகம் ஆகியோரே தெரிவுசெய்யப்பட்டவர்களாவர்.

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தின் திகதி மாற்றம்

வலி.வடக்கு பிரதேச செயலகத்தின் மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி விடுமுறை தினமாக இருப்பதனால் அன்று நடைபெற மாட்டாது என்றும், எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் என பிரதேச செயலர் சு.முரளீதரன் அறிவித்துள்ளார். (101)

# புற்று நோய் வைத்தியசாலை மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது

உடுவில்

தெல்லிப்பளையிலுள்ள புற்றுநோயாளர் வைத்திய நிலையம் கடந்த வாரம் சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் டாக்டர்.ஏ.கேதீஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது.

தினமும் சுமார் முப்பது நோயாளர் வரை இங்கு கதிரியக்க சிகிச்சை பெற்று செல்கின்றனர். அத்துடன், உலக சுகாதார நிறுவனத்தால் எக்ஸ்றே தொழில்நுட்பவியலாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்பொழுது கூட்டுறவு வைத்திய நிலையக் கட்டடத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் மாவட்ட வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு, நீரிழிவு நோயாளர் பிரிவு, பற்சிகிச்சை நிலையம் என்பனவும் இந்த மாத முடிவில் அங்கு செல்லவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்கு ஏதுவாக பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி பா.சிவராஜா வட்டுக்கோட்டை வைத்தியசாலையிலிருந்து இடமாற்றப்பட்டுள்ளார். வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர் அங்கு விடுதிகள் கட்டப்படும்வரை தொடர்ந்தும் தற்போதுள்ள கட்டடத்திலேயே அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (101)

# மாமனிதர் துரைராசாவின் நினைவுதினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது





யாழ்ப்பாணம் —

மாமனிதர் பேராசிரியர் அ.துரைராசாவின் 11 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வு நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது.

மாணவர் ஒன்றியத்தின் உபதலைவர் றொபின்சன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி கே.தேவராஜா, யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் தங்கராஜா, யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றிய தலைவர் பரமநாதன், யாழ்.ஆசிரிய சங்கத் தலைவர் கே.கே.அருள்வேல் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றிவைத்தார். தொடர்ந்து அரங்கில் இடம் பெற்ற நிகழ்வில் மாமனிதர் பேராசிரியர் துரைராசாவின் திருவுருவப் படத்துக்கு துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் மலர் மாலை அணிவித்தார்.

தொடர்ந்து நினைவுரைகளை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் சிவகரன், துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் நிகழ்த்தினர்.

# இந்து சமய வழிபாட்டு சிலையை மாநகர சபை அகற்றியது

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள மரத்தின் கீழ் வைக்கப்பட்டிருந்த இந்து சமய வழிபாட்டு சின்னம் ஒன்று நேற்று யாழ்.மாநகர சபையினரால் அகற்றப்பட்டுள்ளது.

அனுமதி பெறாது மேற்படி வழிபாட்டு சிலை வைக்கப்பட்டிருந்தமை தொடர்பாக தகவல் அறிந்த யாழ்.மாநகர சபையினர் மேற்படி சிலையை அகற்றினர்.

இவ்வாறு யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அனுமதி பெறாது வழிபாட்டு சின்னங்கள், உருவச் சிலைகள் அமைக்கப்படுமாயின் அவை உடனடியாக அகற்றப்படும் என யாழ். மாநகர சபையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, யாழ்.நகரப் பகுதியில் அனுமதி பெறாது வழிபாட்டுத் தலங்கள், சிலைகள் என்பவற்றை அமைப்பது மதங்களை கொச்சைப்படுத்துவதாக அமையும் எனவும் தெரிக்கப்பட்டுள்ளது

# நிவாரண விநியோகம்

யாழ். மாவட்ட ப.நோ.கூ. சங்கங்கள் பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான உலருணவு விநியோகத்திற்கான வழங்கற் கட்டளைகளை யாழ்.மாவட்டச் செயலக புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க செயலகத்தில் நாளை தொடக்கம் 22 ஆம் திகதி வரை பெற்று ஒரேதடவையில் மேற்படி இருமாதங்களுக்குமான விநியோகநடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட செயலக உதவித்திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்

# அரசிலிருந்து வெளியேறும் தீர்மானத்தை ஜே.வி.பி மறுபரிசீலனை செய்யவேண்டும்!

## மைத்திரிபால சிறிசேன கோரிக்கை

கொழும்பு —

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதற்கு எடுத்துள்ள தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன - ஜே.வி.பியினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது குறித்து அவர் தனது வேண்டுகோளில் தெரிவித்துள்ளதாவது -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்திற்கு ஆணை வழங்கிய மக்கள் தொடர்பாக ஜே.வி.பி. கவனம் செலுத்தவேண்டும். ஜே.வி.பியின் அரசியல் பிரிவு அரசாங்கத்திலிருந்து விலகுவதாக எடுத்த தீர்மானத்தை வாபஸ் பெறுமாறு நான் கேட்டுக் கொண்டேன்.

ஜே.வி.பி அரசாங்கத்திலிருந்து விலகுவதாகக் கூறும்போது வலதுசாரிகள் மகிழ்வடைந்துள்ளனர். குறிப்பாக ஐ.தே. கட்சி பெரும் மகிழ்வடைந்துள்ளது. இதன்மூலம் அவர்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வரமுடியுமென நினைக்கின்றனர். ஆனால், ஐ.தே.கட்சி மீண்டும் அதிகாரத்துக்கு வரலாமென எண்ணியுள்ள கனவு ஒருபோதும் நிறைவேறமாட்டாதென நான் உறுதியாகக் கூறுகிறேன். அதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை நாம் முழுமையாகப் பாதுகாப்போம். ஜே.வி.பியின் அரசியல் சபை இது குறித்து மீண்டும் சிந்திக்கவேண்டும். நாம் ஒன்றாக அமர்ந்து, பேச்சுவார்த்தைகள் நடத்தி ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும்.

சுனாமி நிவாரண சபை தொடர்பாக இதுவரை இறுதித் தீர்மானமெதுவும் எடுக்கப்படவில்லை. இவை அனைத்தையும் திறந்த மனதுடன் நாம் பேசவேண்டும் எனவும் அமைச்சர் தனது வேண்டுகோளில் தெரிவித்தார். (தே)

# பொதுக்கட்டமைப்பு உடன்பாடு நாடாளுமன்றம் செல்லாது!

## ஜனாதிபதி மாளிகைத் தகவல்கள் தெரிவிப்பு

கொழும்பு —

பொதுக் கட்டமைப்புக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர் - அது நாடாளுமன்றில் முன்வைக்கப்படமாட்டாதென ஜனாதிபதி மாளிகைத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த சில நாட்களாகப் பொதுக் கட்டமைப்பிலுள்ள விடயங்களை நாடாளுமன்றில் சமர்ப்பிக்குமாறு பல அரசியற் கட்சிகளும், பொது அமைப்புகளும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தன.

இவர்களின் கோரிக்கையைக் கவனத்திலெடுத்த ஜனாதிபதி, தனது சிரேஷ்ட அதிகாரியிடம் பொதுக்கட்டமைப்பு குறித்த விடயங்களை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பது தேவையற்ற ஒன்று எனத் தெரிவித்துள்ளார்.

தற்போது பொதுக் கட்டமைப்பு உடன்பாட்டு நகல் ஜனாதிபதியிடமும், அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவிடமும் மட்டுமே உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# முடிவு எடுக்க இயலாத ஜனாதிபதி பதவியிலிருந்து விலகவேண்டும்

## ஐ.தே.கட்சி கோரிக்கை

கொழும்பு —

நெருக்கடியான நேரத்தில் முடிவுகளை எடுக்க முடியாதுள்ள ஜனாதிபதி சந்திரிகா - ஜனாதிபதி பதவியிலிருந்து விலக வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ விஜயரட்ண இது குறித்து கூறியுள்ளதாவது -

ஜனாதிபதி ஒரு திறமையான தலைவர் அல்ல. ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நாட்டை உலுக்கும் பிரச்சினைகளில் கடினமான முடிவுகளாக இருந்தாலும், சரியான நேரத்தில் அந்த முடிவை எடுத்தனர்.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகாவின் செயற்பாடுகள் அப்படி அல்ல. தன்னால் செய்ய இயலவில்லை என்றபோது அதைச் செய்யக்கூடிய பொருத்தமான நபரிடம் ஜனாதிபதி பதவியை அவர் ஒப்படைக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால் மக்கள் அந்தத் திறமையான நபரைத் தேர்வு செய்துகொள்வார்கள்.

மக்களின் வாழ்க்கைச் செலவினங்கள் கடுமையாக உயர்ந்து விட்டன. பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சாரசபை மறுசீரமைப்பு போன்ற பல விடயங்களில் அவர் எந்தவித முடிவையும் எடுக்க இயலாத நிலையில் உள்ளார். சரியான தலைவராக இருப்பவர் உறுதியான முடிவுகளை எடுக்கவேண்டும்.

பொதுக்கட்டமைப்பு விடயம் தொடர்பாகப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது மௌனத்தைக் கலைத்து, தனது நிலையைத் தெளிவுபடுத்த வேண்டு ஏனென்றால் அவர் பலமுறை பொதுக் க ட்டமைப்புக் குறித்து தனக்கு எதுவுமே தெரியாது என்று கூறியுள்ளார். அவர் தற்போது தனது நிலையை விளக்கவேண்டியது அவசியம் எனத் தெரிவித்தார்.

# மின்கட்டண அதிகரிப்புக்கு அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு

மின்சாரக் கட்டணத்தை எட்டு வீதத்தால் அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாகவும், இதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளதாகவும், இலங்கை மின்சாரசபையின் பொது முகாமையாளர் ரஞ்சித் பொன்சேகா தெரிவித்தார்.

எனினும் க்ட்டண அதிகரிப்பு அமுல் படுத்தப்படும் திகதி இதுவரை தீர்மானிக்கப்படவில்லை. மின் உற்பத்தியில் 60 வீதம் எரிபொருட்களைப் பயன்படுத்தியே மேற்கொள்ளப்படுகிறது.

இதனால் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கும்போது, மின்சார சபைக்கும் நேரடிப்பாதிப்புள்ளது.

எனவே மின்கட்டணத்தில் மாற்றத்தை ஏற்படுத்த நேரிடும். இருப்பினும் நாம் மின் அலகுக்கான கட்டணத்தை அதிகரிக்கவே தீர்மானித்துள்ளோம். அதன் நிலையான கட்டணத்தை அதிகரிக்கவுள்ளோம்.

இதுவரை காலமும் மின் அலகுக்கான கட்டணத்தை மாற்றாது, நிலையான கட்டணம் கணிசமானளவு அதிகரிக்கப்பட்டது. இவ்வாறு நாம் யோசனைகளை முன்வைத்து, 20 வீத அதிகரிப்பைக் கோரினாலும் எட்டுவீத அதிகரிப்புக்கே அனுமதி கிடைக்கும் என அவர் தெரிவித்தார்.

# சந்தேகநபருக்கு விளக்கமறியல்

கொழும்பு —

ஊடகவியலாளர் சிவராம் படுகொலை சந்தேக நபர் - கடுவெல மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் முன்நிறுத்தப்பட்டபோது எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

முன்னாள் புளொட் உறுப்பினரான சந்தேகநபர் பலத்த பாதுகாப்பின் மத்தியில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார். இன்னொரு சந்தேகநபரை நீதிபதி விடுவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# நிசாம் முத்தலிப் கொலை வழக்கு; நீதிமன்றத்தில் சாரதி வாக்குமூலம்

கொழும்பு —

இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரி லெப்.கேணல் நிசாம் முத்தலிப் கொலை வழக்கில் அவரது வாகன சாரதி எச்.எம்.எஸ். சமரட்ண கொழும்பு நீதிமன்றில் வாக்குமூலம் அளித்தார்.

கொழும்பு நீதிமன்ற நீதிபதி ஜிகான் பலப்பிட்டிய முன்னிலையில் அவர் வாக்கு மூலம் அளிக்கையில் -

மேஜர் முத்தலிப்புடன் இரத்மலானைக்கு சென்று கொண்டிருந்தபோது பொல்ஹென்கொட சந்தியில் சமிக்ஞை விளக்கிற்காக வாகனம் நிறுத்தப்பட்டது.

எமது வாகனத்தைப் பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் முத்தலிப்பை நோக்கி சுட்டனர். வாகனத்தின் கதவுகள் மூடப்பட்ட நிலையிலும் பதினைந்துக்கும் மேற்பட்ட துப்பாக்கிச் சூடுகள் அவர் மீது நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்களை மீண்டும் காண நேரிட்டால் அடையாளம் காண இயலும். தனது உயிருக்கு ஆபத்து இருப்பது குறித்து பலமுறை முத்தலிப் என்னிடம் தெரிவித்திருந்தார். அதனால் வாகனம் ஓட்டும் போது அவதானமாகவே ஓட்டுவேன் என்றார் அவர்.

இந்த வாக்குமூலத்தைப் பதிவு செய்து கொண்ட நீதிபதி - முத்தலிப் கொலையாளிகளை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்று குற்றப் பிரிவு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

முத்தலிப்பின் பிரேத பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில் -மார்பு மற்றும் தலையில் பாய்ந்த குண்டுகளாலேயே அவர் உயிரிழந்திருக்கிறார் என்று தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் நடந்த இந்த வழக்கின் விசாரணையில் குற்றப் பிரிவு பொலிஸார் சார்பாக சார்ஜண்ட் எம்.ஜி.பி அமரவன்ச, கொன்ட்ஸ்டபிள் விஜயரத்ன வாசல ஆகியோர் ஆஜராகினர்.



இந்த வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை என்றும் இருவரும் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இதைக் கேட்ட நீதிபதி - அடுத்த ஜூலை 14 ஆம் திகதியன்று வழக்கின் விசாரணை அறிக்கையை நீதிமன்றில் தாக்கல் செய்யவேண்டும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார்.

# ஜே.வி.பியின் கூட்டத்தில்

## செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரை பாதுகாப்பு ஊழியர்கள் வெளியேற்றினர்

மாத்தளையில் நடைபெற்ற ஜே.வி.பியின் கூட்டத்துக்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரொருவர் பாதுகாப்பு ஊழியர்களால் வெளியேற்றப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை மாத்தளை நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற ஜே.வி.பியின் கூட்டத்துக்குச் செய்தி சேகரிக்கச்சென்ற ஊடகவியலாளரொருவர் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் -

உரிய அனுமதிப்பத்திரங்கள் வைத்திருந்தும் அவர் மாத்தளை நகரசபை மண்டபத்திலிருந்து ஜே.வி.பியின் பாதுகாப்பு ஊழியர்களால் வெளியேற்றப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜே.வி.பியின் பாதுகாப்பு ஊழியர் தன்னுடைய உபகரணங்கள், அடையாள அட்டைகள் என்பவற்றை கடுமையாகச் சோதனையிட்டதுடன், அந்தக் கூட்டத்தில் செய்திசேகரிக்க விடாமல் வெளியேற்றிவிட்டதாகக் குற்றம் சாட்டியுள்ள அந்த ஊடகவியலாளர் -

பாதுகாப்பு ஊழியர் ஒருவருக்கு தன்னுடைய உபகரணங்களையோ, அடையாள அட்டைகளையோ சோதனையிடுவதற்கு உரிமையில்லையெனவும் கூறியுள்ளார். எனினும் வெளிமாவட்டத்திலிருந்து வந்த ஒரு பாதுகாப்பு ஊழியரே ஊடகவியலாளரிடம் இவ்வாறு தவறாக நடந்துகொண்டதாக ஜே.வி.பியின் மாத்தளை மாவட்ட அமைப்பாளர் தெரிவித்தார்.

## காலக்கெடு நீடிப்பு குறித்த

# பிரதமரின் வேண்டுகோளை ஜே.வி.பியினர் நிராகரிப்பு!

கொழும்பு —

பொதுகட்டமைப்பு தொடர்பாக ஜே.வி.பி விதித்திருக்கும் காலக்கெடுவை எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதிவரை நீடிக்கவேண்டும் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள் விடுத்த வேண்டுகோளை ஜே.வி.பியினர் நிராகரித்துவிட்டனர்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிஅரசு கவிழ்வதைத் தடுக்கும் ஒரு இறுதி முயற்சியாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் இந்த வேண்டுகோளை விடுத்திருந்தனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு ஜே.வி.பி பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் நந்தன குணதிலக ஆகியோரிடம் பேசிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, தமிழீழ விடுதலைப்புலிகளுடனான பொதுக் கட்டமைப்பில் அரசு கையெழுத்திடும் முன்பாகவே அரசை விட்டுவிலகுவது அர்த்தமற்றது என்று கூறினார்.

இருப்பினும் ஜே.வி.பி தனது நிலையை மாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை என்றும், அதைத்தான் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற பொதுகட்கூட்டத்தில் ஜே.வி.பியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா உறுதிப்படுத்தினார் என்றும் கொழும்பு அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.



இந்தக் காலக்கெடு நீடிப்பு தொடர்பாக ஜே.வி.பியின் பிரசார செயலர் வீரவன்ச கூறுகையில் -

காலக்கெடு குறித்து கட்சியின் மத்திய குழு நிறைவேற்றிய தீர்மானத்தில் எந்தவித மாற்றமுமில்லை என்றார்.

## சுனாமி நிவாரண கிரிக்கெட்

# பிரைன் லாறா அணியைச் சுருட்டிய பிளெமிங் தலைமையிலான அணி



லண்டன்

லண்டனில் நடைபெற்ற சுனாமி நிதிதிரட்டும் கிரிக்கெட் போட்டியில் 112 ஓட்டங்களால் பிளெமிங் அணி வெற்றிபெற்றது. சுனாமி நிதி திரட்டும் கிரிக்கெட் போட்டி நேற்றுமுன்தினம் லண்டனில் நடைபெற்றது. இதில் நியூஸிலாந்து வீரர் பிளெமிங்கை கப்டனாகக் கொண்ட எம்.சி.சி லெவன் அணியும், லாறாவைக் கப்டனாகக் கொண்ட உலக லெவன் அணியும் மோதின.

50 ஓவர்கள் அடிப்படையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற லாறா முதலில் எம்.சி.சி. லெவன் அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தார். எம்.சி.சி. அணி ஆரம்பத்தில் சற்றுத் தடுமாறினாலும் பின்பு ஓட்டங்களை குவித்து விளையாடியது.

கப்டன் பிளெமிங்கும், மேற்கிந்தியத் தீவுகள் வீரர் கிறிஸ் கைலும் முதல் விக்கெட்டுக்கு தொடக்க வீரர்களாக விளையாடினார்கள். சமிந்த வாஸ் பந்தில் கைல் எல்.பி.டபிள்யூ ஆகி 4 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். அவருக்குப் பதில் கங்கூலி ஆட வந்தார். அவரும் பிளெமிங்கும் சேர்ந்து சிறப்பாக ஆடினார்கள். வேகமாக ஓட்டங்கள் குவிந் தன. அந்த அணி அரைச் சதத்தை கடந்தது. இந்த நிலையில் கங் கூலி 14 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

பின்பு வந்த கலிஸ், பிளெமிங் ஜோடி அற்புதமாக ஆடியது. இருவரும் தலா 62 ஓட்டங்களை அடித்தனர். 3 ஆவது விக்கெட்டுக்காக 10 ஓவரில் 62 ஓட்டங்களை இவர்கள் இருவரும் சேர்த்தனர். பின்பு ஆடவந்த சிம்பாப்வேயின் முன்னாள் கப்டன் அன்டி பிளவர் 40 பந்துகளில் 55 ஓட்டங்களை விளாசித் தள்ளினார். வி.வி.எஸ். லக்ஸ்மன் 47 ஓட்டங்கள் எடுத்தார். சங்ககார 46 ஓட்டங்கள் எடுத்தார். எம்.சி.சி. லெவன் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 327 ஓட்டங்களைக் குவித்தது.

சமிந்த வாஸ் 7 ஓவர்கள் பந்துவீசி 19 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டைக் கைப்பற்றினார். கிறிஸ் கெயின்ஸ், வோன் ஆகியோரும் தலா 2 விக்கெட் வீழ்த்தினார்கள். ஷேவாக் 5 ஓவர் வீசினார். அதில் 38 ஓட்டங்கள் போனது. லாறா தன்னை தவிர்த்து மீதி 10 பேரையும் பந்து வீசச்செய்தார்.

அதன் பிறகு உலகலெவன் அணி 328 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பாட்டத் தொடங்கியது. ஆரம்பத்திலேயே ஷேவாக் - பொலக்கின் பந்தில் 5 ஓட்டங்களுடன் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அப்போது அணியின் ஸ்கோர் 10 ஆக இருந்தது. அடுத்து தென்னாபிரிக்க கப்டன் ஸ்மித்தும், ஜெயசூர்யாவும் இணைந்து 56 ஓட்டங்களை குவித்தனர். ஜெயசூர்யா 21 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது கும்ளே பந்தில் ஆட்டமிழந்தார்.

மீண்டும் கும்ளே சிறப்பாக பந்து வீசி ஸ்மித்தை 68 ஓட்டத்தில் ஆட்டமிழக்கச் செய்தார். அடுத்து லாறா ஆடவந்து பவுண்டரிகளாக அடித்தார். கும்ளே பந்தில் ஒரு சிக்ஸர், கலிஸ் பந்துகளில் 4 பவுண்டரிகளை விளாசினார் அவரும் 42 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது கும்ளே பந்தில் ஆட்டமிழந்தார். அதன் பின்பு அந்த அணியில் யாரும் சோபிக்கவில்லை. ஹர்பஜன் சிங் மளமளவென விக்கெட்டுகளை அள்ளினார். ராவிட் 19, சந்தர்போல் 2, கெயின்ஸ் 1, வோன் 17, வாஸ் 12, முகமது சமி 5 ஓட்டங்களை எடுத்தனர். என்ரினி ஓட்டம் எதுவும் எடுக்கவில்லை. இப்படி 35 ஓவரிலேயே உலக லெவன் அணி 215 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்தப் போட்டியில் எம்.சி.சி. லெவன் அணி 112 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. கும்ளே 3 விக்கெட், ஹர்பஜன் சிங் 3 விக்கெட் வீழ்த்தினார்கள். அக்தர் 5 ஓவர் வீசி 31 ஓட்டங்கள் கொடுத்தும் விக்கெட் கிடைக்கவில்லை. அனில் கும்ளே ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## 100 மீற்றர் ஓட்டத்தில் ஜமேக்கா வீரர் உலக சாதனை




ஏதென்ஸ்

கிரிஸ் தலைநகர் எதென்ஸில் நடைபெற்ற உலக தடகளப் போட்டிகளில் 100 மீற்றர் ஓட்டத்தில் ஜமேக்கா நாட்டு வீரர் அசபாபவல் உலக சாதனை படைத்தார். அவர் பந்தய தூரத்தை 9.77 வினாடிகளில் கடந்தார்.

இதற்கு முன்பு 9.78 வினாடிகள்தான் உலக சாதனையாக இருந்தது. 2002 ஆம் ஆண்டு பிரான்ஸில் நடந்த போட்டியில் ரிம்மொன் கோமெரி இந்தச் சாதனையை நிகழ்த்தினார். இதை இப்போது அசபாபவல் முறியடித்துள்ளார்.

இந்த மைதானத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த கிரீனி 1999 இல் 100 மீற்றர் ஓட்டத்தில் உலக சாதனை நிகழ்த்தினார். அப்போது அவர் எடுத்துக்கொண்ட நேரம் 9.79 வினாடி ஆகும்.

## விளையாட்டு

## இலங்கை கிரிக்கெட்: போட்டி விபரம்

இலங்கையில் - இந்தியா, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் பங்கேற்கும் ஒருநாள் கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் 25 ஆம் திகதி தொடங்கி ஒகஸ்ட் 7 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

லீக் முறையில் நடைபெறும் இந்தப் போட்டியில் ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் 2 முறை மோதவேண்டும். பகல் - இரவு போட்டியாக சில போட்டிகள் நடத்தப்படும். கொழும்பு மற்றும் தம்புள்ளவில் போட்டிகள் நடைபெறும்.

போட்டி விபரம் வருமாறு -

| | |
|---|---|
| ஜுலை 25 | இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் (தம்புள்ள) |
| ஜுலை 27 | இந்தியா - இலங்கை (தம்புள்ள) |
| ஜுலை 29 | இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் (தம்புள்ள) |
| ஜுலை 31 | இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் (தம்புள்ள) |
| ஒகஸ்ட் 03 | இந்தியா - இலங்கை (கொழும்பு) |
| ஒகஸ்ட் 05 | இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் (கொழும்பு) |
| ஒகஸ்ட் 07 | இறுதிப்போட்டி (கொழும்பு) |

# கிரிக்கெட் சூதாட்டம்; அசாருதீன் மறுப்பு!



அம்ஸ்டர்டாம்

தன் மீதான கிரிக்கெட் சூதாட்ட குற்றச்சாட்டு முழுப் பொய் என்று அசாருதீன் கூறியுள்ளார்.

கிரிக்கெட் போட்டிகளின் முடிவை வைத்து சூதாட்டம் நடத்தி வந்த ஷோபன் மேத்தா தனது வாக்குமூலத்தில் - அசாருதீன், அஜய் ஜடேஜா, நயன் மொங்கியா, குரேஞ்ஞே, மார்க்வோ ஆகியோருடன் தனக்கு தொடர்பு இருந்தது என்று கூறியுள்ளார்.

அத்தோடு அவுஸ்ரேலியா, பாகிஸ்தான், இங்கிலாந்து நாட்டு சூதாட்டக்காரர்களிடமும் தொடர்பு வைத்து உலக அளவில் சூதாட்டம் நடத்தியதையும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

ஷோபன் மேத்தாவின் வாக்குமூலம் மீண்டும் கிரிக்கெட்டில் புயலை கிளப்பியுள்ளது. இந்திய கிரிக்கெட் நிர்வா கிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தங்கள் மீதான மேத்தாவின் குற்றச்சாட்டை நயன் மொங்கியா, அசாருதீன் ஆகியோர் மறுத்துள்ளனர்.

போலந்து நாட்டில் உள்ள அம்ஸ்டர்டாமில் நடந்த நட்சத்திர போட்டியில் கலந்துகொண்ட அசாருதீனிடம் சூதாட்ட புகார் குறித்து கேட்டதற்கு அவர் கூறியதாவது -

இது முழுக்கமுழுக்க பொய்யானதாகும். நான், ஷோபன் மேத்தாவை ஒரு போதும் சந்தித்தது இல்லை. அவர் எப்படி இருப்பார் என்று கூட எனக்கு தெரியாது. என் பெயரைக் களங்கப்படுத்த இப்படி எல்லாம் உண்மைக்கு புறம்பானதை சொல்வது நல்லதல்ல. என்பெயரை ஏன் இழுக்கிறார்கள் என்பது தெரியவில்லை. இவ்வாறு அசாருதீன் கூறியுள்ளார்.

# முன்னணி வீரர் வீராங்கனைகள் விம்பிள்டனில் மோதவுள்ளனர்!




லண்டன்

கணுக்கால் காயத்திலிருந்து மீண்டு வந்துள்ள செரீனா வில்லியம்ஸ் - விம்பிள்டன் ரெனிஸ் தொடரில் பங்கேற்கிறார். ரோஜர் பெடரர், லெடன் ஹெவிட் போன்ற முன்னணி வீரர்கள் இதில் பங்கேற்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கிராண்ட் ஸ்லாம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் தொடர் எதிர்வரும் 20 ஆம் திகதி லண்டனில் தொடங்குகிறது. இதில் பங்கேற்கும் வீர, வீராங்கனைகளின் பட்டியல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

கணுக்கால் காயத்தால் பிரெஞ்ச் ஓபன் தொடரில் பங்கேற்காத அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் தற்போது பூரண குணமடைந்துள்ளார்.

இவர் மீண்டும் விம்பிள்டனில் பங்கேற்றவுள்ளார். 2002, 2003 இல் சம்பியன் பட்டம் வென்ற இவர் இந்த ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாமான அவுஸ்ரேலிய ஓபனிலும் கோப்பை வென்றவராவார். இதனால் விம்பிள்டனிலும் அசத்தலாகச் செயற்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

நடப்பு சம்பியனான ரஷ்யாவின் மரியா ஷரபோவா பங்கேற்பதும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவர்களுக்குப் போட்டியாக 1999 இல் சம்பியனான அமெரிக்காவின் டேவன் போட்- 2000, 2001 சம்பியனான அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் ஆகியோரும் விளையாடவுள்ளனர்.

ஆண்கள் பிரிவில் நடப்பு சம்பியனான சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் பங்கேற்கிறார். கடந்த ஆண்டு 3 கிரான்ட்ஸ்லாம் பட்டம் வென்ற இவர் 2005 இல் அவுஸ்ரேலியாவின் பிரெஞ் ஓபன் அரையிறுதியில் தோல்வியடைந்தார். இதனால் விம்பிள்டன் பட்டம் வென்று இழந்த பெருமையை மீட்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

விம்பிள்டன் சாம்பியன்ஷிப்

இவருக்கு நெருக்கடியளிக்க அமெரிக்காவின் அன்டி ரொடிக், ஆந்ரே அகாஷி, அவுஸ்ரேலியாவின் லெடன் ஹெவிட் ஆகியோரும் களமிறங்குகின்றனர். புதிய இளம் புயல் வீரரான ஸ்பெயினின் ரபெல் நாடலும் பட்டியலில் இடம்பெற்றுள்ளார். 19 வயதாகும் இவர் பிரெஞ் ஓபனில் சம்பியன் வென்றதன் மூலம் அதிகம் எதிர்பார்க்கப்படுகிறார்.

ஏனைய முன்னணி வீரர்களான ஸ்பெயினின் கார்லோஸ் மோயா, ஆர்ஜென்ரீனாவின் கஸ்டன் காடியோ, யுவான் இக்னேசியோ செலா, அமெரிக்காவின் மர்டி பிஷ் ஆகியோர் காயம் காரணமாகப் போட்டியிலிருந்து விலகியுள்ளனர்.

# டெண்டுல்கரின் திறமை குறைய வாய்ப்பில்லை!

## வக்கார் யூனுஸ் தெரிவிப்பு



இஸ்லாமாபாத்

டெண்டுல்கர் கடந்த 15 ஆண்டுகளாக இந்தியாவுக்காக விளையாடிப் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி இருக்கிறார். காயம் ஏற்பட்டாலும் கூட அவர் இப்போதும் சிறந்த வீரராகவே திகழ்கிறார். அவருடைய திறமை குறைவதற்கு வாய்ப்பில்லை என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் வக்கார் யூனுஸ் தெரிவித்தார்.

டெண்டுல்கருக்கு ஏற்பட்ட காயம் குறித்து அவர் கூறியதாவது -

அவர் 100 டெஸ்ட் போட்டிகளுக்கு மேல் விளையாடி இருக்கிறார். போட்டியில் அர்ப்பணிப்பு தன்மை கொண்டவர். இன்னும் பல ஆண்டுகள் அவர் போட்டியில் விளையாடுவார் என்பதே எனது கருத்தாகும்.

# பட்டதாரிப் பயிலுனர்களுக்கு மாத இறுதியில் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம் —

பட்டதாரி பயிலுனர்களுக்கு இம்மாத இறுதியில் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு, ஜூலை மாதம் நியமனங்கள் வழங்கப்படும் என, வடக்கு - கிழக்கு மாகாண யாழ். மாவட்ட பிராந்திய ஆணையாளர் தெரிவித்தார்.

பட்டதாரிகளின் நேர்முகத் தேர்வு தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாண யாழ். மாவட்ட பிராந்திய ஆணையாளருடன் தொடர்புகொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

யாழ். மாவட்டத்தில் இந்த நேர்முகத்தேர்வை எங்கு நடத்துவது என இதுவரை முடிவு செய்யப்படவில்லை எனவும், அவர் தெரிவித்தார்.

இந்த நேர்முகத்தேர்வில் கூடிய புள்ளிகள் பெறுபவர்கள் தமது விருப்ப ஒழுங்குப்படி நியமனம் பெறுவர் எனவும், சராசரிக்கு குறைவான புள்ளிகள் பெறுபவர்கள் வெற்றிடமாக உள்ள இடங்களுக்கு அமைச்சால் நியமனம் வழங்கப்படும் எனவும் தெரியவருகிறது.

# அனுமதி பெறாமல் வியாபாரத்தில் ஈடுபடுவோரை கைது செய்யுமாறு உத்தரவு!

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்டத்தில் அனுமதி பெறாமல் வியாபாரத்தில் ஈடுபடும் வெளிநாட்டவர்கள் மற்றும் உள்நாட்டவர்களை கைதுசெய்யுமாறு யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தற்போது யாழ். குடாநாட்டில் வெளிநாட்டவர்களும், உள்நாட்டவர்களும் அனுமதி பெறாமல் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றமையால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

இதற்கமைய யாழ். குடாநாட்டில் அனுமதி பெறாது வியாபாரத்தில் ஈடுபடுகின்றவர்களைக் கைதுசெய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தியாவிலிருந்து வருகைதந்து வீடு வீடாகச் சென்று வியாபாரத்தில் ஈடுபடும் சில வியாபாரிகள் திருட்டு முயற்சியில் ஈடுபட்டதாகவும் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

# அரச காணி இருப்பின் தகவல் தருமாறு கோரிக்கை

சுதுமலை —

சண்டிலிப்பாய் பிரதேசத்துக்கான கால்நடை வைத்திய நிலையம் ஒன்றை அமைப்பதற்கு தேவையான அரச காணி இருக்குமாயின் அதனைத் தெரியப்படுத்துமாறு, அந்தப் பகுதி கால்நடை வைத்தியர் ச.சுப்பிரமணியம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தப் பகுதியில் கால் நடை நிலையம் அமைப்பதற்குத் தேவையான நிதியைத் தமது திணைக்களம் தருவதாக உறுதியளித்துள்ளது. எனினும் இக்கட்டடம் அமைப்பதற்கு வசதியாக காணி எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

இந்த வைத்திய நிலையத்தால் பல பகுதிகளைச் சேர்ந்த கால்நடை வளர்ப்பவர்களும் பயனடையக்கூடும் எனவும், பிரதேச நலன்விரும்பிகள் நன்கொடையாக நிலம் வழங்க விரும்பினால் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர்மேலும் தெரிவித்தார். (44)

# சந்நிதியான் ஆசிரமத்தில் பெரியபுராண சொற்பொழிவு

தொண்டமனாறு —

தொண்டமனாறு - சந்நிதியான் ஆசிரமத்தில் சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில், சந்நிதியான் ஆசிரம மண்டபத்தில் இடம்பெறும் வாராந்த நிகழ்வுத்தொடரில் - நாளை காலை ஆசிரம இயக்குனர் அமுத கலாயோகி செ.மோகனதாஸ் சுவாமியின் விசேட பூஜை, தீப ஆராதனை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் 'பெரிய புராணம்' என்ற தலைப்பில் சமய சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இந்த நிகழ்வுக்கான அறிமுகவுரையை இளைப்பாறிய தபால் அதிபரும், பேரவையின் கௌரவ உப பொருளாளருமான செல்லையா நடராசா நிகழ்த்துவார்.

# இளைஞர்களால் தொல்லை

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் றக்கா வீதியில் குளத்தடிக்கு அருகில் மாலை நேரம் கூடும் இளைஞர்கள் குறிப்பிட்ட வீதியால் போக்குவரத்து செய்பவர்களுக்கு பெரும் இடையூறாக அமைந்திருப்பதாக அந்த வீதியால் போக்குவரத்துச் செய்பவர்கள் தெரிவித்துள்ளனர்.

மதுபோதையில் நின்று கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களைப் பாவிப்பதாகவும், குறிப்பாக பெண்களை கேலி செய்தும், வீண் சண்டைகளுக்கு இழுத்தும் இந்த இளைஞர்கள் தொல்லை செய்து வருவதால் - வீதியால் போக்குவரத்து செய்வோர் பெரும் இடையூறுகளையும், அசௌகரியங்களையும் எதிர்நோக்கி வருவதாக சம்பந்தப்பட்டவர்களுக்கு புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (55)

# டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் —

இலங்கை நூலக சங்கத்தால் நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா பகுதி ஒன்று கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

அல்லது க.பொ.த சாதாரண பரீட்சையில் ஆங்கில மொழியுடன் கூடிய ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன், நூலகத்துறையில் குறைந்தது 3 வருடங்கள் தொழில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆங்கிலம் சித்தியடையாதவர்களுக்கு ஆங்கிலத்தில் தகுதிகாண் பரீட்சை ஒன்று நடத்தப்படும்.

தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு ஜூலை மாதம் 02, 03 ஆம் மற்றும் 9, 10 ஆம் திகதிகளில் முற்பகல் 9.30 முதல் 12.30 மணிவரை நேர்முகத்தேர்வு நடத்தப்படும். இந்த நேர்முகத்தேர்வு மேற்குறிப்பிட்ட தினங்களில் யாழ். பல்கலைக்கழக நூலகத்தில் இடம்பெறும்.

# நிரந்தர வீடமைக்கும் பணிகள் இன்னமும் ஆரம்பிக்கவில்லை

## வடமராட்சி கிழக்கு மக்கள் விசனம்


வடமராட்சி கிழக்கு —

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை என, அந்தப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

நிரந்தர வீடுகளை அமைப்பதற்குரிய காணிகள் இன்னமும் உரியமுறையில் தெரிவுசெய்யப்படாமையே இதற்கு காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

தென்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு முடிவுறும் தறுவாயில் இருக்கின்ற போதிலும், வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமை தமக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (122)




# சின்னஞ்சிறுசெய்திகள்

## நற்செய்தி பெருவிழா

யாழ்ப்பாணம் —

யாழ். அடைக்கல அன்னை தேவாலய முன்றலில் எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் விசேட நற்கருணை நற்செய்தி பெருவிழா நடைபெறவுள்ளது.

திருமலையிலிருந்து விசேடமாக யாழ்ப்பாணம் வருகைதரவிருக்கும் அருட்திரு போல் றொபின்சன் அடிகளார் விசேட நற்கருணை நற்செய்தி வழிபாட்டு நிகழ்ச்சியை நடத்தி வைக்கவுள்ளார்.

28 ஆம் திகதி மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்ச்சிகள் இரவு 10 மணி வரைக்கும், 29 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பிக்கும் வழிபாடுகள் நள்ளிரவு 12 மணிவரை நடைபெறும் எனவும் ஆலய பங்குத்தந்தை வண பிதா ம.இ.பயஸ் அடிகளார் தெரிவித்தார். (206)

## குடிநீர் வசதியின்றி மக்கள் அவதி

அரியாலை —

அரியாலை பாரதி வீதி, ஸ்ரான்லி வீதி முன் ஒழுங்கை மற்றும் பெந்திக்கொஸ்தே முன் ஒழுங்கை ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் குடிநீர் வசதியின்றி அவதிப்படுவதாக கூறப்படுகிறது.

இந்தப் பகுதிகளில் உள்ள வீடுகளில் பெரும்பாலான கிணறுகள் உவர்நீரை கொண்டுள்ளதால், இந்தப் பகுதி மக்கள் நீண்டதூரம் நடந்துசென்றே குடிநீரைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இதனால் இவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இது பற்றி யாழ்.மாநகர சபை உடனடியாக கவனத்தில் எடுக்கவேண்டும் எனவும் இந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (55)

## மருமகன் மீது மாமனார் தாக்குதல்

யாழ்ப்பாணம் —

மாமனாரின் தாக்குதலுக்கு இலக்கான மருமகன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் கொக்குவிலைச் சேர்ந்த 29 வயதுடைய எஸ்.பிரகாஷ் என்பவரே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேற்படி இருவருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டதையடுத்து, வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதால் மாமனார் மருமகனை தடியால் தாக்கியதால் தலையிலும், கால்களிலும் படுகாயமடைந்துள்ளதாக தெரியவருகிறது.

## தென்மராட்சியில் பலாப்பழங்களின் விலைகள் வீழ்ச்சி

தென்மராட்சி —

தென்மராட்சி பிரதேசத்தில் தற்போது பலாப்பழம் அமோக விளைச்சலைக் கொடுத்துள்ளது. சாவகச்சேரி, மீசாலை, கொடிகாமம் சந்தைகளில் மிகப்பெரிய பலாப்பழம் 50 ரூபாவுக்கே விற்கக்கூடியதாகவுள்ளது.

இது சந்தைக்கு பலாப்பழத்தைக் கொண்டுவரும் செலவு மற்றும் சந்தை வாடகைக்கே போதுமானதாகவுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதனால் பலர் தமது வீடுகளில் விளைந்த பலாப்பழத்தை கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்துவதையும், உறவினர், நண்பர்களுக்கு இலவசமாக வழங்குவதையும் காணக்கூடியதாகவுள்ளது. (24)

## விசேட பிரார்த்தனை

கொழும்புத்துறை —

கொழும்புத்துறை சட்டம்பித்தறை அருள்மிகு ஸ்ரீ விசாகப் பெருமான் முருகன் திருக்கோவிலில் நாளை மாலை 6.30 மணி தொடக்கம் நாடு நலம் பெற உலக நாடெங்கும் அமைதி, சமாதானம், சுபீட்சம் நிலவவும், இறை ஆசி வேண்டி விசேட அபிஷேகமும், பூஜை, தீப ஆராதனை வழிபாடுகளும் ஆலய பிரதம பூசகர் சிவ ஸ்ரீ ஆறுமுகம் சுந்தரமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த வைபவத்தில் மாலை விசேட பஜனை, கூட்டுப் பிரார்த்தனை வழிபாடுகளும், சிவஞானச் செல்வர் சி.சி.வரதராசா தலைமையில் நடைபெறவுள்ளன.

## ஜி.ரி.இசற்றால் தகரக் கொட்டகை அமைப்பு

தென்மராட்சி —

தென்மராட்சி பிரதேச செயலகம் தற்போது இயங்குகின்ற வீட்டுக் காணியில் ஜி.ரி.இசற் நிறுவனத்தினர் சுமார் 40 அடி நீளமான தகரக் கொட்டகை ஒன்றை நிர்மாணித்துக் கொடுத்துள்ளனர்.

மிகவும் இட நெருக்கடியான சூழலில் இயங்கும் இந்தப் பிரதேச செயலகத்துக்கு இந்தக் கொட்டகை பெரும் பயனளிக்கும்.

இதேவேளை மேற்படி பிரதேச செயலகத்துக்கென அமைக்கப்பட்டுவரும் புதிய இரண்டு மாடிக் கட்டட வேலைகள் முடிவடையும் கட்டத்தை நெருங்கிவிட்டதாக கூறப்படுகின்றது. நவீன வசதிகள் கொண்டதாக இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (24)

## அரசின் அடக்குமுறையைக் கண்டித்து நேற்று தென்மராட்சியில் ஆரம்பமான உண்ணாவிரதப் போராட்டத்திலிருந்து...









# பெரிய வெங்காய உற்பத்தி

(சென்றவாரத்தொடர்ச்சி...)


## நடுவதற்காக தோட்டத்தைப் பண்படுத்தல்

30 சென்றி மீற்றர் ஆழத்துக்கு மண்ணை உழுது அல்லது கொத்திப் புரட்டுக. கற்களையும், புற்களையும் அகற்றுக. மண்கட்டிகளை உடைத்து மண்ணைத் தூர்வையாக்குக.

10-12 தொன் நன்கு உக்கிய சேதனப் பசளையை ஒரு ஹெக்டயர் நிலப்பரப்பில் (ஒரு ஏக்கருக்கு 4-5 தொன்) பரவி மண்ணுடன் நன்கு கலந்து விடுக.


❒ இதன் பின்பு நாற்றுக்களை நடுவதற்கு மேடைகளை அமைக்க வேண்டும்.

❒ நீர் வடிப்புக் குறைவான தரைகளில் உயர் மேடை சிறந்தது.




❒ நன்கு நீர் வடிகின்ற இடங்களில், சிறுபோகத்தில் உலர் வலயப் பிரதேசங்களுக்கு தாழ்வான பாத்தி சிறந்தது.

உயர் மேடைகளும், தாழ்வான பாத்திகளும் 3 மீற்றர் (10 அடி) நீளம் 90 சென்ரி மீற்றர் (3 அடி) அகலம், 12-15 சென்ரி மீற்றர் (5-6 அங்குலம்) உயரம் உடையனவாக இருக்க வேண்டும். இரண்டு பாத்திகளுக்கு இடையில் 20-30 சென்ரிமீற்றர் (8-12 அங்குலம்) இடைவெளி இருக்க வேண்டும்.




## பசளையிடுதல்

☆ நடுவதற்கு 2-3 நாட்களுக்கு முன்பு அடிக் கட்டுப் பசளையை மேடைகளில் தூவி, மண்ணுடன் கலந்து விடுக.


☆ மேற்கட்டுப் பசளைகளைத் தாவர நிரைகளுக்கு இடையில் தூவி மண்ணுடன் கலந்து விடுக.

## நடுதல்

✤ 4-6 வார வயதுடைய, 3 அல்லது அதற்குக் கூடிய இலைகள் உடைய, நோய்களற்ற, செழித்து வளர்ந்துள்ள நாற்றுக்களை நடுக.

✤ பொதுவாக, பல விவசாயிகள் பெரிய வெங்காயப் பயிரை மேற்கொள்ளும் போது நாற்றுக்களைத் தெரிவு செய்வதில்லை. முளைக்க வைப்பதற்கு 3-4 இலைகள் கொண்ட நாற்றுக்களே சிறந்ததாகும்.

✤ 1-2 இலைகள் கொண்ட நாற்றுக்களை முளைக்க வைப்பதனால், நல்லதொரு வெங்காயக் கிழங்கை எதிர்பார்க்க முடியாது. மேலும் சேறான இடங்களில் பதியம் போடுவதனாலும் குறைந்த விளைச்சலே கிடைக்கும்.



✤ வேர்களுக்கு சேதம் ஏற்படாத வகையில், 10x10 சென்ரி மீற்றர், (4x4 அங்குலம்) அல்லது 8x8 சென்ரி மீற்றர், (3x3 அங்குலம்) இடைவெளிகளில் நாற்றுக்களை நடுக.

✤ 1/2 சென்ரி மீற்றர், (1/4 அங்குலம்) ஆழத்தில் நாற்றுக்களை நடுவது சிறந்தது.

✤ நடும் போது மேடைகள் ஈரமாக இருக்க வேண்டும், அல்லது நட்டவுடன் நீர் பாய்ச்ச வேண்டும்.

✤ நாற்றுக்களுக்கு இடையேயுள்ள குறுகிய இடைவெளி தொடர்பில் கவனமாக இருக்க வேண்டும்.

✤ இது விளைச்சல் குறைவதற்கு ஒரு காரணமாகலாம்.

## நீர்ப்பாசனம்

✪ நாற்று நட்டு முதல் மாதத்தில் 2-3 நாட்களுக்கு ஒரு தடவை நீர் இறைக்க வேண்டும்.

✪ இரண்டாம் மாதத்திலிருந்து 5-6 நாட்களுக்கு ஒரு தடவை நீர் ஊற்றுக.

✪ மணல் தன்மையான தரைகளில் தினசரி நீர் ஊற்ற வேண்டும்.

✪ அறுவடை செய்வதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு நீர் ஊற்றுவதை நிறுத்த வேண்டும்.

## களைகளைக் கட்டுப்படுத்தல்

★ நாற்று நட்டு 2,4,6 ஆம் வாரங்களில் களைகளைக் கைகளால் பிடுங்கி அகற்றலாம்.

✪ களைநாசினிகள் பாவிப்பதாயின் உரிய வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

✪ களைநாசினிகள் பாவித்தால் 3-4 வாரங்களின் பின்பு முளைக்கும் களைகளை பிடுங்கி அகற்றினால் போதுமானது.

✪ நடும் இடத்தில் இஞ்சிப்புல், மேட்டுக் கோரை ஆகிய களைகள் காணப்பட்டால், நடுவதற்கு 14 நாட்களுக்கு முன்பு உரிய களைநாசினிகளைப் பயன்படுத்தி, நிலப் பரப்பிற்கு விசிற வேண்டும். (முற்றும்)

# வீட்டுக்கொரு வாழை நாட்டுவோம்

தற்போது வாழைக்கு அதிக கேள்வி சந்தையில் அதிகரித்தவண்ணம் உள்ளது. இதற்குக் காரணம், வெயில் காலத்தில் குளிர்மையான பழங்களை உண்பது உடலுக்கு நல்லது என்பதாலாகும். இன்றைய சந்தையில் அதிக வகையான பழங்கள் இருந்தாலும், வாழைக்கே அதிக கேள்வி நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



அநேகமாக ஒவ்வொரு வீட்டிலும் வாழை மரம் இருக்கும். ஆனால் இவை பருவத்தில் குலை போடுவதில்லை. இதற்குக் காரணம்,

1. பசளையை அதிகமாகப் பாவிக்காமை.

2. நோய்களாலும், கிருமிகளாலும் தீங்கேற்படல்.

3. சீரான நீர் வினியோகம் இன்மை போன்றவை ஆகும்.

வாழை வளர்ப்பிற்கு அதிக இடவசதியோ அல்லது மனித முயற்சியோ அதிதேவையில்லை. பெரியளவில் உற்பத்தி செய்வதாயின் அதிக இடவசதி அவசியம்.

வாழைமூலம் பல பயன்களைப் பெற்றுக் கொள்ளலாம். அவை வாழைப்பழம், வாழை இலை, வாழைத்தண்டு மூலம் நார், வாழைப்பூ போன்றவை ஆகும்.

இந்த வாழைகளைத் தோட்டங்களிலே ஊடு பயிராக ஆங்காங்கே பயிரிட்டுப் பயனடையலாம். நோய்கள், பீடைகள் தாக்கும்போது உரிய கிருமிநாசினியை நோய் தாக்கியுள்ள பகுதியைச் சுற்றித் தெளிக்கலாம். இதற்கான கிருமி நாசினிகளை விவசாய நிலையங்களில் பெற முடியும்.

வாழையைப் பயிரிட்டு, சீரான முறையில் பராமரித்தால் பயனை குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு வாழைமரம் ஒருமுறை மட்டுமே வாழைக் குலையைத் தரும். பின்னர் அந்த வாழையை அகற்றிவிடுதல் வேண்டும். வாழைக்குட்டிகள் நன்றாகப் பரந்து வளரக்கூடியன.

இது இலகுவாகப் பராமரிக்கக்கூடிய பயிராகும். இதனை ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு வகையான ரகத்தில் நாட்டிப் பயனடையலாம்.

– தீ.சாரங்கன்.

# தொழில் முன்னேற்றத்துக்கு சில வரிகள்

☆ ஒரு நிர்வாகியாக வெற்றிபெற வேண்டும் என்றால், நிறுவனப் பகுதிகளை அடிக்கடி பார்வையிடுங்கள். குறைகளையே சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். நிறைகளைக் கண்டு பாராட்டி அவை பெருகச் செய்யுங்கள்.

☆ இன்னார் இல்லையென்றால், அங்கே நிர்வாகம் நடக்காது என்ற நிலை வருமானால், அந்த நிறுவனம் தோல்வியடையப் போகின்றது என்று பொருள்.

☆ கலந்துரையாடல் கூட்டம் ஒன்று ஏன் கூட்டப்படுகிறது. அதன் நோக்கம் என்ன? விவாதிக்கப்பட வேண்டியவை எவை என்ற தகவல்கள் அதில் கலந்து கொள்பவர்களுக்கு முன் கூட்டியே தெரிவிக்கப்பட வேண்டும்.

☆ ஒரு நிறுவனத்தில் அனைவரது பணியும் அவ்வப் போது தகுந்த நபரால் விருப்பு வெறுப்பின்றி எடை போடப் படல் வேண்டும். நிறுவனத்தில் நிகழும் தவறுகளைக் கண்டு பிடித்துத் திருத்திக் கொள்வதே சரி.

☆ விசுவாசம் என்பது ஒரு நிறுவனத்தின் மேல் தளத்திலிருந்து, அடிமட்டம் வரை பரவ வேண்டும்.

☆ வியாபாரம் வளர வேண்டுமானால், ஒவ்வொரு ஊழியரிடமும் நிறுவனத்தின் சகல அம்சங்களையும் சொல்லிப் புரிய வைக்க வேண்டும். அவரவர்கள் தம் வேலையைச் செய்வது எந்த அளவுக்கு முக்கியமானது என்பதையும் உணர்த்த வேண்டும்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 60/= | 70/= | 80/= | 50/= | 60/= | 50/= |
| வெண்டிக்காய் | 40/= | 40/= | 50/= | 40/= | 40/= | 60/= |
| உருளைக்கிழங்கு | 75/= | 70/= | 70/= | 80/= | 80/= | 90/= |
| கத்தரிக்காய் | 40/= | 40/= | 60/= | 35/= | 40/= | 50/= |
| பாகற்காய் | 90/= | 70/= | 80/= | 80/= | 70/= | 70/= |
| கரட் | 40/= | 50/= | 60/= | 40/= | 40/= | 60/= |
| பீற்றூட் | 50/= | 40/= | 50/= | 40/= | 45/= | 40/= |
| முருங்கைக்காய் | 350/= | 200/= | 200/= | 300/= | 300/= | 200/= |
| வெங்காயம் | 60/= | 45/= | 50/= | 40/= | 50/= | 70/= |
| பச்சை மிளகாய் | 50/= | 40/= | 60/= | 60/= | 50/= | 60/= |

## தொழில்மலர்

# நவீன வர்த்தகத்திலும் தன்னைத் தக்கவைத்துள்ள காசோலை வணிகம்

இன்றைய வணிகயுகம் இன்ரநெற் யுகமாக மாற்றங்கண்டு, தனக்கென ஒரு வணிகப் பரப்பியலை உருவாக்கி, அதற்கென ஒரு கருத்தியல் பரிமாணத்தையும் கொடுத்துள்ளது. இத்தகைய கருத்தியல் பரிமாணங்கள் பண வடிவத்திலும் சரி, அதன் **(Medium of Exchage)** ஊடக மாற்றத்திலும் சரி, புதியதொரு பரிணாம வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதைக் காணமுடிகிறது.

இந்த வளர்ச்சியே இன்றைய மின் வணிகமும் **(e-Commerce)**, கிரெடிற் காட் கொடுப்பனவு முறைகளும் ஆகும். ஆனால் மேற்படி நிலையிலும், நவீன வணிகப் பரிணாமத்திலும் தன்னைத் தக்கவைத்துள்ள ஒரு பாதுகாப்பான பணப்பரிமாற்றமே காசோலை வணிகமாகும்.

இன்று அரச மற்றும் தனியார் நிறுவனங்களோ அல்லது தனிநபர்களோ காசோலையைப் பெருமளவுக்குப் பயன்படுத்துவதனால், அதன் முக்கியத்துவம் தெரிந்திருப்பது அவசியமானதாகும்.

வணிக வங்கிகள் ஊடாக பணக் கொடுப்பனவுகளைச் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பிரதான ஊடகம் காசோலையாகும். நடப்புக் கணக்கில் வங்கியில் வைப்புச் செய்யும் ஒருவர் அவ்வங்கி வழங்கும் காசோலைகளைத் தான் செய்ய வேண்டியிருக்கும் கொடுப்பனவிற்காகத் தமது கணக்கினடிப்படையில் பயன்படுத்தலாம்.

இந்தக் காசோலைகளை பணத்தை எடுப்பதற்கோ அல்லது ஒருவருக்குப் பணத்தைக் கொடுப்பதற்கோ பயன்படுத்த முடியும்.

இதன்படி நோக்கினால், ஒருவர் வங்கியில் வைத்திருக்கும் பணத்திலிருந்து தமக்கோ, வேறொருவருக்கோ குறிப்பிட்டதொரு தொகையை கொடுக்குமாறு வங்கிக்கிடும் கட்டளையை காசோலை எனலாம்.

அச்சிட்ட ஒரு படிவத்தை நிரப்புவதன் மூலம் ஒரு காசோலை எழுதப்படும். அந்தக் காசோலையிலேயே வங்கியின் பெயரும், முகவரியும், காசோலை இலக்கமும், கணக்கு இலக்கமும் இருப்பதோடு கணக்கு வைத்திருப்போர் திகதி, பெயர், கொடுபடவேண்டிய பணத்தொகை என்பவற்றை எழுதி ஒப்பமிடல் வேண்டும்.

ஒரு காசோலையில் எழுதப்பட்ட எழுத்துக்களோ, இலக்கங்களோ மாற்றப்பட வேண்டிய அவசியம் நேருமாயின், அவ்வாறு மாற்றப்பட வேண்டிய எழுத்துக்களையோ, இலக்கங்களையோ ஒற்றைக் கோட்டினால் வெட்டப்பட்டு, அவை மீள எழுதப்படல் வேண்டும். அவ்வாறு மாற்றம் செய்யப்பட்ட இடங்களிலெல்லாம் வரைவோரின் முழுமையான கையொப்பம் இடப்படல் வேண்டும்.

ஒரு காசோலையை **(Payee)** கொடுணி பெற்றதும், அதனை அவர் எடுப்போரின் வங்கியில் காசாக மாற்றிக் கொள்ளலாம் அல்லது எந்தவொரு வங்கியிலேனும் வைக்கப்பட்டுள்ள கொடுணியின் **(Current Account)** நடப்புக் கணக்கில் வைப்புச் செய்து கொள்ளலாம் அல்லது நடப்புக் கணக்கொன்றை வைத்துள்ள வேறொருவருக்கு அவர் அக்காசோலையை வேற்றுரித்தாக்கிக் கொள்ளலாம்.

காசோலைகளை, காவிக்காசோலை, கட்டளைக் காசோலை என இரு வகைப்படுத்தலாம். அல்லது காவி எனும் சொற்கள் கொடுணியின் பெயருக்கு எதிராக எழுதப் பட்டிருப்பின், அது காவிக் காசோலை வகையைச் சார்ந்ததாகும்.

வங்கியில் இந்தக் காசோலையைக் கொடுக்கும் எவரும் அதனைக் காசாக மாற்றிக் கொள்ளலாம்.

அல்லது கட்டளை எனும் சொற்கள் கொடுணியின் பெயருக்கு எதிராக எழுதப்பட்டிருப்பின், அது கட்டளைக் காசோலை வகையைச் சார்ந்ததாகும். காசோலையில் அச்சிடப்பட்டுள்ள அல்லது காவி எனும் சொற்கள் ஒரு கோட்டினால் வெட்டப்பட்டு, அவற்றுக்குப் பதிலாக அல்லது கட்டளை எனும் சொற்கள் எழுதப்பட்டிருப்பின், அக்காசோலை ஒரு கட்டளைக் காசோலையாகக் கொள்ளப்படும். மேலும் ஒரு காசோலையிலிருந்து அல்லது காவி எனும் சொற்களை வெட்டிவிட்டால் கூட, அது கட்டளைக் காசோலையாகிவிடும்.

புறக்குறிப்பு **(Promissory Note)** கொண்ட காசோலைகள் பற்றி நோக்குகையில்- காசோலை ஒன்றைப் பெறும் ஒரு கொடுணி- அதனைக் காசாக மாற்றுவதற்கு வங்கியொன்றிடம் கொடுக்கும் பொழுது அல்லது அதனைக் தனது கணக்கில் வரவு வைக்குமாறு கேட்கும்போது அல்லது மற்றுமொரு கணக்கு வைப்பாளருக்கு அதனை வேற்றுரித்தாக்கும் பொழுது, காசோலையில் தமது பெயர், எழுதப்பட்டபடியே அந்தக் காசோலையின் பின்புறம் அவர்தமது பெயரை எழுத வேண்டும். அல்லது தமது கையொப்பத்தை இடவேண்டும்.

இவ்வாறு கையொப்பம் இடுவது வங்கிச்செயன்முறையின் பிரகாரம் புறங்குறிப்புச் செய்தல் என அழைக்கப்படுகிறது.



ஒருவர் தமது பெயரில் எழுதப்பட்ட காசோலை ஒன்றைக் காசாக மாற்றுவதற்கு வங்கியிடம் கொடுக்கும்போது, தமது பெயரை அக்காசோலை யில் எழுதப்பட்டவாறே அதன் பின்பக்கத்தில் எழுதி, அதன் கீழ் கையொப்பம் இடுவாராயின் புறக்குறிப்பு முற்றானதாகக் கொள்ளப்படும்.

அந்தக் காசேலையை அவர் மற்றுமொரு கணக்கு வைப்பாளருக்கு வேற்றுரித்தாக்குவாராயின், அவர் தமது பெயரை அதன் பின்பக்கத்தில் எழுதுவது மட்டுமே போதுமானதாகும்.

கொடுணியானவர் தமது கணக்கில் வரவு வைப்பதற்காக அதனைத் தமது வங்கியிடம் கொடுப்பாரானால், அதன் பின்பக்கத்தில் தமது கணக்கு இலக்கத்தையும், வரவு அறிவுறுத்தல்களையும் எழுதி வங்கியிடம் கையளிக்கவேண்டும்.

கட்டளைக் காசோலை ஒன்று மற்றொருவருக்கு வேற்றுரித்தாக்கப்படும் பொழுது, புறக்குறிப்புச் செய்வது இன்றியமையாதது. காவிக் காசோலையொன்றைக் காசாக மாற்றுவதற்குச் சம்பந்தப்பட்ட வங்கியிடம் கெடுக்கும்போது, மேற்கூறிய வகையில் அதனைப் புறக்குறிப்புச் செய்ய வேண்டுமென்ற அவசியமில்லை.

எனினும் ஓர் ஒழுங்கிற்காக அல்லது மேலதிக பாதுகாப்பிற்காக, பெரும்பாலான வணிக வங்கிகள் கொடுணியின்கையொப்பத்தைப் பெற்றுக் கொள்கின்றன. இவ்வாறான காசோலைகள் புறக்குறிப்புச் செய்யப்படாமலேயே மற்றொருவருக்கு வேற்றுரித்தாக்கப்பட முடியுமாதலின், அவை கட்டளைக் காசோலைகளைப் போன்று அத்துணைப் பாதுகாப்பானவையல்ல.

கோடிட்ட காசோலைகள் பற்றி நோக்குகையில், ஒரு காசோலைக்கு கோடிடல் என்பது சாதாரணமாக அக்காசேலையின் முகப்பில் இரண்டு ஒத்தியைவான கோடுகளை வரைதலாகும். ஒரு காசோலை கோடிடப்பட்டிருந்தால், அது மிகப் பாதுகாப்பானதாகக் கொள்ளப்படும்.

குறிப்பாக நாம் காசோலைகளை அஞ்சலில் அனுப்புவதாயின், அவை கோடிடப்படுவது முறையாகும். அவ்வாறானதொரு காசோலை வங்கிக் கணக்கொன்றின் ஊடாக மட்டுமே மாற்றப்பட முடியும்.

கொடுணியின் பெயரில் வங்கிக் கணக்கு திறக்கப்பட்டிருந்தால், அவரது கணக்கில் வரவு வைக்கும்படி காசோலைகளை வங்கியில் ஒப்படைக்கலாம். கொடுணிக்கு வங்கிக் கணக்கு இல்லையாயின், அவருக்குத் தெரிந்த நடப்புக் கணக்கு வைத்திருக்கும் ஒருவரின் மூலமாக அக்காசோலைகளைக் காசாக மாற்றிக் கொள்ளலாம்.

காசோலை முகப்பிலே எந்தப் போக்கிலும் கோடுகளை வரைந்து கொள்ளலாம். பெரும்பாலும் காசோலையின் முகப்பில் குறுக்காக இரண்டு ஒத்திசைவான கோடுகள் வரையப்பட்டிருக்கின்றன. சில வேளைகளில் வங்கியிடமிருந்து கோடிடல் அச்சடிக்கப்பட்ட காசோலைகளைக் கணக்கு வைத்திருப்போர் பெறமுடியும்.

காசோலைகள் அச்சிட்ட **(Crossing)** கோடிடலைக் கொண்டிருக்காவிடின், இரண்டு ஒத்திசைவான கோடுகளை வரைவதன் மூலம் அவற்றைக் கோடிட்ட காசோலைகளாக்கிக் கொள்ள முடியும். கோடிடல்கள் இரு வகைப்படும்.

1) பொதுக் கோடிடல் **(G.Crossing)**
2) சிறப்புக் கோடிடல் **(S.Crossing)**

ஒரு காசோலையின் குறுக்காக இரு கோடுகள் வரையப்பட்டு, அவற்றுக்கிடையே "அன்கோ" "கைமாறற்ற காதது" அல்லது "கொடுணி கணக்கிற்கு மட்டும்" எனும் சொற்களில் ஒன்று எழுதப்பட்டிருந்தால் அது ஒரு பொதுக் கோடிடலாகக் கொள்ளப்படும்.

(தொடரும்...)

எஸ்.ஜெயா

## தொழில் வங்கி



| நிறுவனம் | வெற்றிடமாக உள்ள பதவிகள | அடிப்படைத்தகுதி | விண்ணப்ப முடிவு திகதி |
|---|---|---|---|
| கலாசார அலுவல்கள் திணைக்களம். | ✪ கலாசார அபிவிருத்தி உதவியாளர். | ☆ கலைமாணிப் பட்டதாரி. | 20.06.2005 |
| | ✪ சட்ட உதவியாளர். | ☆ சட்ட நிபுணர் பட்டம். ஆங்கிலத்தில் பரந்த அறிவு. | |
| | ✪ பதிப்பாசிரியர் சபை உதவியாளர். | ☆ ஏதாவதொரு பொதுப் பட்டம்/ விசேட பட்டம் பெற்ற பட்டதாரி. ☆ கணினி அறிவு. | |
| | ✪ திட்ட உதவியாளர். | ☆ பொருளியல் / புள்ளி விபரவியல் போன்ற பாடங்களுடன் பட்டம் அல்லது வர்த்தமானிப் பட்டம் பெற்ற பட்டதாரி. | |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 'வேலைக்கு ஊதியம்' திட்டம் ஆரம்பம்

## ஒக்ஸ்பாம் நிறுவனத் திட்டப் பணிப்பாளர் மாட்டின் தெரிவிப்பு

வடமராட்சி கிழக்கு—

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் பயன்பெறவேண்டும் என்ற நோக்கில்வேலைக்கு ஊதியம் என்ற திட்டத்தை ஆரம்பித்துள்ளோம் என வன்னி மாவட்ட ஒக்ஸ்பாம் நிறுவனத் திட்டப் பணிப்பாளர் மாட்டின் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க பணிமனையில் நடைபெற்ற குளிரூட்டி வாகனங்கள் அன்பளிப்புச் செய்யும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

சுனாமி அனர்த்தம் நடந்ததைக் கேள்விப்பட்டவுடன் முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்குப் பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டவேளை மக்களுக்கு ஏற்பட்ட சோக நிகழ்வுகள் குறித்து பெரும் கவலையடைந்தேன்.

எமது நிறுவனம் விவசாய முயற்சிகளுக்கான உதவிகளை மட்டுமே செய்து வந்தது. சுனாமிக்குப் பின்னர் தான் கடற்தொழிலாளர்களுக்கு உதவிகள் செய்யவேண்டும் என்று தீர்மானித்து தலைமை அலுவலக அனுமதி கிடைத்த பின் 40 படகுத் தொகுதிகளை வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்களுக்கு வழங்குவதெனத் தீர்மானித்தோம்.

மீன்களைப் பிடித்தால் மட்டும் போதாது, பிடிக்கும் மீன்களை நல்ல விலையில் சந்தைப் படுத்துவதற்கு வாகனங்கள் தேவை என வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று இரண்டு குளிரூட்டி வாகனங்களைச் சமாசத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளோம்.

கடற்தொழிலாளர்கள், சங்க அங்கத்தவர்கள் தாம் பிடிக்கும் மீன்களைச் சமாசத்திற்கு வழங்குவதன் மூலம் மீனுக்கு நல்ல விலை கிடைக்கும். இதன் மூலம் அங்கத்தவர்கள், கடற்தொழிலாளர்கள் பெரும் பயனடைய முடியும்.

சுனாமியால்பாதிக்கப்பட்ட மக்கள் பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் 'வேலைக்கு ஊதியம்' என்ற திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இதன் மூலம் நாளொன்றுக்கு ஒவ்வொருவரும் 400/= ரூபா வருமானம் பெற முடியும்.

கடற்கரை வீதிகளைப் புனரமைக்கும் பணிகளில் ஈடுபட்டிருப்பதுடன், இடைத் தங்கல் முகாம்களில் கழிப்பறைகள், குடிதண்ணீர் வசதிகளை குழாய் மூலம் ஏறபடுத்திக் கொடுத்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை ஒக்ஸ்பாம் நிறுவனத் திட்டப் பணிப்பாளர் மாட்டின், உதவித் திட்டப் பணிப்பாளர் ரவி, கடற்தொழில் பரிசோதகர் த.கணேசமூர்த்தி, மருதங்கேணி காவல் பணிமனைப் பொறுப்பாளர் எஸ்.சிவகுமார் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழதேசியக் கொடியை வடமராட்சி கிழக்கு கடற் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் அ.நிலவன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் செயலாளர் கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ் நிகழ்த்தினார்.

சிறப்புரையை ஒக்ஸ்பாம் நிறுவன வன்னி மாவட்ட திட்டப் பணிப்பாளர் மாட்டின், உதவித் திட்டப் பணிப்பாளர் ரவி, கடற்தொழில் பரிசோதகர் க.கணேசமூர்த்தி, வடமராட்சி கிழக்கு சுனாமி அனர்த்தச் செயலகப் பொறுப்பாளர் யாழவன், வடமராட்சி கிழக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் யூட் ஆகியோர் நிகழ்த்தினர்.

நன்றியுரையை வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசப் பொது முகாமையாளர் த.பாலசிங்கம் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் ஒக்ஸ்பாம் நிறுவனப் பணியாளர்கள், கடற்தொழில் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.(21)

# புனரமைக்கப்படாத நிலையில் பூநகரி- நாச்சிக்குடா பிரதான வீதி

பூநகரி—


பூநகரி-நாச்சிக்குடா பிரதான வீதி மிகவும் மோசமாக சேதமடைந்து காணப்படுவதால் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால இந்தப் பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்

நாச்சிக்குடா சந்திப்பகுதியில் இருந்து நாச்சிக்குடா கிராமம் வரையான சுமார் 2கிலோ மீற்றர் நீளமான வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதுடன் நீர்ப்போக்கிகள் உடைந்த நிலையிலும் காணப்படுகிறது. இதனால் இந்தப் பிரதேச .மக்கள் போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமங்களையும் விபத்துக்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதனை கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளருடன் நோர்வே முன்னாள் நீதிபதி சந்திப்பு



கிளிநொச்சி—

தமிழீழ காவல்துறைப்பொறுப்பாளர் பா.நடேசனை நோர்வேயின் ஓய்வுபெற்ற பிரதம நீதிபதி பேராசிரியர் காபென் சுமித் நேற்று முன்தினம் கிளிநொச்சியிலுள்ள காவல்துறை நடுவப் பணியகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் ஆரம்பமான இந்தச் சந்திப்பு 6.00 மணி வரை நீடித்தது.

இந்தக் கலந்துரையாடல் குறித்து தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் கருத்துத் தெரிவிக்கையில்

இக்கலந்துரையாடலில் தமிழீழக் காவல்துறையின் செயற்பாடுகள் வளர்ச்சி என்பவற்றையும் தமிழீழ காவல்துறை மனித உரிமைகளை சர்வதேச விதிகளுக்கேற்ப கைக்கொள்ளும் விதம் பற்றியும் விளக்கியதாகத் தெரிவித்தார்

# உலக இரத்ததான தினத்தை முன்னிட்டு புனர்வாழ்வுக்கழகத்தினரால் இரத்ததானம்!



கிளிநொச்சி—

உலக இரத்ததான தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண் டர்கள் இரத்ததானம் செய்துள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள் ஒரு தொகுதியினர் நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வைத்தியர் பிறைற்றன் முன்னிலையில் இரத்த தானம் செய்தனர்.

இந்த இரத்தம் வழங்கும் நிகழ்வில் இரத்ததானம் வழங்கியமைக்கான சான்றிதழ்களை அவர் வழங்கினார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த வைத்தியர் பிறைற்றன் - தமிழர் புனர்வாழ்வுக்கழக தொண்டர்களின் இந்த மனித நேயப் பணியானது வரவேற்கத்தக்கதும், பாராட்டுக்குரியதென்பதோடு இது போன்ற மனிதாபிமானப் பணிகளைச் செய்வதற்கு ஏனைய நிறுவனங்களும் முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஜூன் - 16

1878: சத்திர சிகிச்சைகளின் போது ஈதரை மயக்க மருந்தாக முதன் முதலாகப் பயன்படுத்திய கிராப்போர்ட் வில்லியம்சன் லோங் என்ற அமெரிக்க மருத்துவவியலாளர் மரணமடைந்தார்.

1882: அமெரிக்காவின் அயோவாப் பகுதியில் ட்யூபக் என்ற இடத்தில் ஆலங்கட்டி மழை பெய்தது. அவ்வாறு பெய்த ஆலங்கட்டிகளுள் இரண்டு தவளைகள் உறைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன.

1903: போர்ட் மோட்டார் கம்பனி அமெரிக்காவில் தொடங்கப்பட்டது.

1913: தென்னாபிரிக்காவில், அந்த நாட்டுப் பழங்குடியினர் நிலம் வாங்குவதையோ, குத்தகைக்கு எடுப்பதையோ கட்டுப் படுத்தும் இன ஒதுக்கீட்டு நிலச் சட்டத்தை தென்னாபிரிக்க வெள்ளையின அரசு நிறைவேற்றியது.

1917: ஜேர்மனியில் அம்மை நோய்க்கு 2300 இற்கு மேற்பட்டவர்கள் பலியானதாக அரசு அறிவித்தது.

1920: ஹொலன்ட் ஹேக் நகரில் நிரந்தரமான சர்வதேச நீதிமன்றம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1922: டொமினியன் அந்தஸ்துடன் பிரிட்டனின் கொமன் வெல்த்தின் உறுப்பினராக அயர்லாந்து விளங்க வேண்டும் என்ற தமது கருத்தை அயர்லாந்து மக்கள் நடந்த தேர்தல் மூலம் எடுத்துக் கூறினர்.

1932: முதலாவது உலகப் போருக்கான நட்டஈட்டை வழங்குவது பற்றிய மீள் பேச்சுவார்த்தை லௌசன்னாவில் ஆரம்பமாகியது. ஜேர்மனி, ஜப்பான், பெல்ஜியம், இத்தாலி, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் இதில் பங்குபற்றின.

1933: பொருளாதார சீர்குலைவைத் தவிர்க்க அமெரிக்காவில் பொதுப்பணித்துறை நிறுவப்பட்டது.

1938: தமிழ்நாடு, சென்னையில் முதலாவது வானொலி நிலையத்தை ராஜாஜி ஆரம்பித்து வைத்தார்.

1941: அமெரிக்காவிலுள்ள ஜேர்மனி தூதரகங்கள் அனைத்தையும் அடுத்த மாதம் 10ஆம் திகதிக்குள் மூடிவிடும்படி அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் உத்தரவிட்டார்.

1948: முதலாவது விமானக் கடத்தல் நடந்தது. ஹொங்கொங்கிற்குச் சென்று கொண்டிருந்த கதே பசுபிக் எயார்லைன்ஸை சேர்ந்த விமானத்தைக் கொள்ளைக் கூட்டத்தினர் துப்பாக்கி முனையில் கடத்த முற்பட்டனர். விமானி எதிர்த்ததன் காரணமாக, கொள்ளையர்கள் சுட்டதால், விமானம் தரையில் விழுந்து நொருங்கியது.

1958: ஹங்கேரியில், முன்னாள் பிரதமர் இம்ரே நாகிக்கு பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

1963: ரஷ்யாவினால் வோஸ்டாக்-6 என்ற விண்கலம் செலுத்தப் பட்டது. இதில் தலைமை விண்வெளி வீரராகச் சென்ற வாலண்டைனா தெரஸ்கோவா என்ற 26 வயதுடைய பெண்மணியே விண்வெளியில் சென்ற முதல் பெண் வீராங்கனையாவார். அவர் இந்த விண்கலத்தில் 71 மணி நேரங்கள் பயணம்செய்து 48 தடவைகள் பூமியைச் சுற்றிவந்தார்.

1971: B.B.C. ஐ உருவாக்கிய ஜோன் சார்ள்ஸ் வோல்ஷம் ரீத் காலமானார்.

1976: தென்னாபிரிக்காவில் கறுப்பர்கள் குடியிருப்பு பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் ஒரு சில பாடங்கள் மட்டுமே ஆபிரிக்காவிலுள்ள சுதேச மொழியில் கற்றுத்தர வேண்டும் என்று தென்னாபிரிக்க வெள்ளையின அரசு விடுத்த உத்தரவை எதிர்த்துப் பெரும் கலவரம் ஏற்பட்டது. பல நூற்றுக் கணக்கான மாணவர்கள் இதில் பலியாகினர். ஆயிரக் கணக்கான மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

1977: ஏவுகணையை முதன் முதலாகக் கண்டுபிடித்தவரும், ஜேர்மனியில் பிறந்து அமெரிக்காவில் குடியேறியவருமான வெர்னர் வோன் பிரான் மரணமானார்.

1981: நேபாளத்தில் முதன் முதலாக நடந்த தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசின் முதலாவது பிரதமராக சூர்ய பகதூர் தாப்பா பதவியேற்றார்.

1995: பலாலிப் பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில் இலங்கைப் படையினரால் மின்னல் தாக்குதல் என்ற இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது .

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்*
*குற்றமே கூறி விடும்!*

திருக்குறள்

# நமது நோக்கு

## கலகத்தில் பிறக்கும் நியாயம்

பொதுக்கட்டமைப்புக்கு எதிரான போராட்டங்கள் தலைநகர் கொழும்பை பெரும் பரபரப்புக்குள்ளாக்கியுள்ள நிலையில் – மீண்டும் சர்வதேச சமூகம் பொதுக்கட்டமைப்பை உடனடியாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியிருக்கிறது.

வொஷிங்டனில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைவர்கள் மாநாட்டிலேயே இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே கண்டியில் கடந்த மாதம் நடந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிலும், இதேபோன்று பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துமாறு வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஆனால்,வொஷிங்டன் மாநாட்டின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் பொதுக்கட்டமைப்பை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்ற கடுமையான தொனியை அவதானிக்க முடிகிறது.

கண்டிமாநாட்டில் பொதுக்கட்டமைப்பை வலியுறுத்திய நாடுகள் – இப்போது அதை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு வற்புறுத்தியிருப்பது, இலங்கையில் உள்நாட்டு அரசியலில் முக்கியமானதொரு திருப்பமாகவே அமையக்கூடும்.

ஏனெனில் , ஜனாதிபதி சந்திரிகாவும் ஜே.வி.பியும் பொதுக்கட்டமைப்பைவைத்து ஒரு அரசியல் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கின்றனர்.

ஜே.வி.பியை வெட்டிவிடவேண்டும் என்ற நிலைப்பாட்டுடனும் – பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதைவிட வேறு வழியில்லை என்ற நிலையிலும் ஜனாதிபதி சந்திரிகா அரசியல் நகர்வுகளை மேற்கொண்டிருக்கிறார்.

ஆனால், ஜே.வி.பியோ இதை ஒரு இனவாத அரசியலாக்கி – ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராக வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்திவருகின்றது.

ஜே.வி.பி மற்றும் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளின் கூட்டணிக்கு முன்னால் ஜனாதிபதி சந்திரிகாவினால் பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்த முடியுமா என்ற சந்தேகம் பரவலாக உள்ளது.

ஆனாலும், இதை எப்படியாவது நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கட்டாயம் சிங்கள அரசியல் தலைமைகளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பில் இருந்து விலகிக்கொள்வதை சர்வதேச சமூகம் ஒருபோதும் அனுமதிக்காது. அப்படி விலகிக்கொண்டால் – நாடு எதிர்கொள்ளப்போகும் பொருளாதார நெருக்கடியை எவர் வந்தாலும் தீர்க்கமுடியாது போய்விடும்.

அதுபோலவே இந்தப் பொதுக்கட்டமைப்பு உருவாக்கத்தை எதிர்க்கட்சித் தலைவரால் கூட எதிர்க்கமுடியாது. இதனால் தான் அவரும் இதற்கு ஆதரவு தெரிவித்திருப்பதுடன் – ஜே.வி.பி அரசில் இருந்து வெளியேறினாலும், ஆட்சிக்கவிழ்ப்பு இடம்பெற ஒரு போதும் துணைபோக மாட்டோம் என அறிவித்திருக்கிறார்.

இன்று, பொதுக்கட்டமைப்பு சந்திரிகாவுக்கும் ரணிலுக்கும் தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிட்டது. இதைக்கூட இவர்களால் நடைமுறைப்படுத்த முடியாவிட்டால், எப்படி சமாதானப் பேச்சுக்கள் மூலம் தமிழ்மக்களுக்கு நியாயமான தீர்வை வழங்கமுடியும் என்று சர்வதேச சமூகம் கேள்வி எழுப்புமல்லவா?

இப்படியான நிலையில் தமிழ் மக்களின் போராட்டத்தின் மீதான நியாயத்தன்மையை சர்வதேச சமூகம் முழுமையாகவே அங்கீகரித்துவிடும். இதனால் சந்திரிகாவுக்கு பொதுக்கட்டமைப்பு எவ்வாறு அவசியமோ ரணிலுக்கு அதைக்குழப்பாமல் இருப்பது அவசியமாகிறது.

வொஷிங்டன் மாநாட்டில் உடனடியாக பொதுக்கட்டமைப்பை உருவாக்குமாறு விடுக்கப்பட்ட அழுத்தத்திற்கு – ஜே.வி.பியினரும் ஹெலஉறுமயவினரும். நடத்தும் போராட்டங்கள் கூட காரணமாக இருந்திருக்கலாம்.

எங்கே ஜே.வி.பியின் போராட்டங்களுக்கு சந்திரிகா பணிந்து விடுவாரோ என்ற கருத்தினாலோ – ஜே.வி.பியின் போராட்டத்தின் தீவிரத்தன்மையை குறைப்பதற்காகவோ இணைத்தலைமை நாடுகள் இந்த கடும் தொனியை பயன்படுத்தி இருக்கலாம்.

ஆனால், இது செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளது. ஜே.வி.பியோ, ஹெலஉறுமயவோ கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. அவர்களின் எதிர்ப்பின் தீவிரம் அதிகரித்தவாறே செல்கிறது.

இன்று தென்னிலங்கை அரசியல் சூழலும் சர்வதேச சமூகத்தின் கடுமையான தொனியும் சிங்கள பேரினவாதத்திற்கு சாவுமணி அடிப்பதாகவே அமையப்போகிறது. இவை தமிழ் மக்களுக்கு நிச்சயம் நியாயமான தீர்வைப் பெற்றுத்தரும். ஏனெனில், ''கலகம் பிறந்தால் தான் நியாயம் கிடைக்கும்' .

# நாடும் நடப்பும்




**'ஊர்சுற்றி'யார் பார்வையில்...**

## தாண்டிக்காய்க்குள் சனியன் மாதிரி பொதுக்கட்டமைப்புக்குள் சங்கரி!

இனவாதக் கூச்சலுக்கும், குமுறலுக்கும் இப்போது தான், இலங்கையில் நாட்டின் தலைவி ஒருவர், துணிந்து எதிர்கொள்ளுப் சக்தி இருக்கிறதென்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார். இதேசமயம் இனவெறியைக் கக்கும் ஒரு ஆங்கில தினசரியில் முற்றிலும் எதிர்பாராத ஒரு கட்டுரை தமிழ் மக்களுக்குச் சாதகமாக வந்திருக்கிறது. இந்த இரண்டு விடயங்களுமே தமிழ் மக்களுக்குக் கொஞ்சம் எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையூட்டுவதாக அமைந்திருக்கிறது.

இந்தச் சமயம் பார்த்து, "தாண்டிக்காய்க்குள் சனியன் புகுந்தமாதிரி'' சங்கரி வழக்கம்போல விடுத்த அறிக்கையை அதே ஆங்கில தினசரி தனது நேற்றைய முதற்பக்கத்தில் "திருஷ்டி பட்டதுபோல்'' வெளியிட்டிருக்கிறது என்று சொல்லிக்கொண்டு வந்தமர்ந்தார் நண்பர் பரமசிவம்.

கடற்கோளால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத் தமிழ் பேசும் மக்களுக்கு வெளிநாடுகள் மனம் இரங்கிக் கொடுத்த உதவிகளைப் பங்கிட்டுக்கொடுப்பதற்கு ஒரு பொதுக்கட்டமைப்பு அமைப்பதற்கு இனவெறிபிடித்த ஜே.வி.பியும், அரசியல் புத்தபிக்குகளும் இனவாதத் தொல்லைகளையெல்லாம் கொடுத்துக்கொண்டிருக்கின்றன.

இவற்றையெல்லாம் எதிர்த்து பொதுக்கட்டமைப்பை நிறைவேற்றி செயற்படுத்தவே சந்திரிகா அம்மையார் துணிந்து செயற்பட்டுவருகிறார். இலங்கையின் வரலாற்றில் புத்த பிக்குகளின் பட்டினிப் போருக்கும் படுத்துக்கிடப்பதற்கும் சந்திரிகாவின் அப்பனும் அம்மையும் பணிந்துபோனதைத்தான் மக்கள் பார்த்துப் பழக்கப்பட்டார்கள். இம்முறைதான் அப்பாவையும் அம்மாவையும் மிஞ்சி மகள் சந்திரிகா நாட்டுக்குத் தலைமைதாங்கும் தகுதியை நிறைவேற்றியிருக்கிறார்.

எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டாலும் நான் பொதுக்கட்டமைப்பை நிறைவேற்றுவேன் என்று சொன்ன சொல்லை இன்னும் காற்றில் பறக்கவிடவில்லை என்று நான் சொன்னேன்.

சந்திரிகா அம்மையார் சொன்னதைச் செய்யும் பக்குவ நிலைக்கு வந்திருக்கிறார் என்றே சொல்லவேண்டும். இந்த சமயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொஞ்சம் ஆண்பிள்ளைத்தனமாக நடந்துகொண்டால் அவருக்கு நாட்டு மக்களிடம் மட்டுமல்ல, உலக நாடுகளிடமும் மதிப்பும், மரியாதையும் ஏற்படும். அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்குத்தான் அவர் தன்னைத் தயார்படுத்திக்கொண்டிருக்கிறார் என்று பரமசிவம் சொன்னார்.

வீடு பற்றி எரியும் போது பீடிக்கு நெருப்புக் கேட்ட மாதிரி ஜே.வி.பி கூட்டரசை விட்டு வெளியேறினால் ஆட்சி நிலைக்குமா, பொதுக்கட்டமைப்பை எதிர்த்து கிளர்ச்சி செய்யும் பிக்குகளால் நாட்டின் அமைதி குலையுமா, இனக்கலகத்தை, மதக் கலகத்தை வேண்டாத சக்திகள் தூண்டி நாட்டை அழிவுக்குக் கொண்டு போக எத்தனிக்கப்போகுதுகளா இவற்றைத்தடுத்து நாட்டில் அமைதியையும், ஒற்றுமையையும் எப்படி நிலை நாட்டுவது விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பை எப்படி பெறுவது இச்சமயத்தில் விடுதலைப் புலிகள் முரண்டு பிடித்து விடாமலிருக்க என்ன செய்யலாம் என்றெல்லாம் சந்திரிகா அம்மையார் யோசித்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறார் என்றேன்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைவர்கள் விடுத்துள்ள கூட்டறிக்கையில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளிப்பதற்காக அமைக்கப்படும் பொதுக்கட்டமைப்பில் உடன் கைச்சாத்திடுமாறு அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியும் அரசியல் புத்த பிக்குகளும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றபோதிலும், கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்க சந்திரிகா அரசும் உலகநாடுகளும் தயாராகி விட்டன. இதன் மூலம் இலங்கையின் எதிர்காலம் கொஞ்சம் நம்பிக்கையளிப்பதாக இருக்கிறது. இதேசமயம் தமிழ் மக்களுக்கு வெளிநாடுகள் கொடுக்க உறுதியளித்த உதவிகள் வழங்கப்படாவிட்டாலும் அடுத்த கட்டமாக உலக நாடுகளிடம் நேரடியாகவே உதவி கேட்டுப் பெறுவதற்கு ஆயத்தமா கும் நிலையிலிருக்கிறோம்.

ஐலன்ட் பத்திரிகையில் ஆர்.எம்.பி.சேனநாயக்கா எழுதியது போல விடுதலைப் புலிகளையோ தமிழ்மக்களையோ ஒதுக்கி வைத்துவிட்டு சிங்கள - பௌத்த மேலாண்மைவாதிகள் தங்கள் விருப்பப்படி நடத்த முற்பட்டால் உலக நாடுகள் நேரடியாகவே விடுதலைப் புலிகளுக்கு உதவ முன்வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். செர்பியர்களின் நிலையில் சிங்கள - பௌத்தர்கள் நிற்கட்டும். கொசோவோ மக்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் உதவமுன்வருவதுபோல உலக நாடுகள் தமிழீழத்துக்கு உதவ முன்வரமுடியும் என்று பரமசிவம் சொன்னார்.

இப்படியொருநிலை வந்துவிடும் என்று சிங்கள - பௌத்த மேலாண்மைவாதிகளுக்கும் தெரியும். இதற்காகத்தான் சங்கரிபோன்றவர்களை வாலாட்டுவதற்காகக் கட்டிவைத்திருக்கிறார்கள்!

சங்கரி புகழ்ந்துபாடிய சந்திரிகாவே எதிர்ப்புகளைச் சமாளித்து, புலிகளுடன் ஒத்துழைக்க முன்வந்துள்ள நிலையில் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி அரசியல்வாதிகளுக்குச் சாதகமாகப் பிரசாரம் செய்து வருகிறார். இதுமட்டுமல்ல கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாடுகள் அளித்த உதவியைப் பங்கிட்டுக் கொடுக்க முனையும்பொழுது தமிழர்களுக்கு தமிழீழத்தில் சுதந்திரம் இல்லை யென்றும், உதவி வழங்கும் நாடுகள் இவர்களுக்கு விடுதலை வாங்கித்தர வேண்டும் என்றும் அறிக்கை விட்டுக்கொண்டிருக்கிறார் என்றார் பரமசிவம்.

ஏ-9 பாதையூடாகப் பயணம் செய்யும் ஆட்களைக் கூட சங்கரியார் பார்ப்பதில்லைப்போலும் என்றேன்.

அவருக்கு இப்போது வசதி வாய்ப்புகள் அதிகம் இருப்பதால் கொழும்பில் உல்லாசம். இல்லையேல் வெளிநாடுகளில் கும்மாளம். அவர் எதற்காக ஏ-9 பாதையைப் பார்க்கப்போகிறார். அவர் கற்பனையில் வாழ்கிறார்கள். வாழட்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்கவிருக்கும் உதவிகளைத் தடுக்காமலிருந்தால் போதும் என்று சொல்லிக்கொண்டு நடந்தார் பரமசிவம்.

நேற்றுமுன்தினம் உலக இரத்ததான தினம். எதுக்கெல்லாமோ இரத்தம் சிந்தவும், உயிர்துறக்கவும் தயாராக இருப்பதாகக் கோஷம் எழுப்புகிறார்கள். எத்தனை பேர் இத்தினத்தில் இரத்ததானம் கொடுத்தார்கள்?

இன்று யாழ்ப்பாணத்தில் வீதிவிபத்துக்கள் அதிகரித்துவரும் காலம். விபத்துக்களில் சிக்கி உயிருக்காக போராடுபவர்கள் பலர். இரத்தம் தேவைப்படுபவர்கள் விலை பேசவேண்டிய நிலை. இரத்தம் கொடுப்பதால் இதயநோய் போன்றவைகள் இல்லாமல்போகும். மனித உயிரைக் காப்பாற்றும் மனம் இன்றைய இளைஞர்களுக்குத் தேவை. இரத்ததானம் செய்ய யாழ்.இளைஞர்கள் முன்வந்து வழிகாட்டவேண்டும் என்று ஓர் இளைஞர் வந்து சொல்லிவிட்டுப்போனார். நான் பதில் சொல்லு முன் போய்விட்டார் என்றார் பரமசிவம் நடந்தபடியே!

வாரநோக்கு... யாழவன்

# பேரினவாதத்தின் கொக்கரிப்புகளும் அதற்கெதிரான போராட்டங்களும்

நாட்டில் தற்போது பரவலாக எங்கும் எதிர்ப்புப் போராட்டங்களே நடைபெற்று வருகின்




றன. அனைத்துப் போராட்டங்களுமே பொதுக்கட்டமைப்பை அடிப்படையாக வைத்துத்தான் நடைபெறுகின்றன.

தென்னிலங்கையிலே பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டாமென அதற்கு எதிரான போராட்டங்களும், வடபகுதியிலே பொதுக்கட்டமைப்பை விரைவாக ஏற்படுத்தக்கோரும் போராட்டங்களும் என இரண்டுமே எதிரெதிர் முடிவுகளை முன்வைத்து, முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் போராட்டங்களில் ஈடுபடும் தரப்பினர்கூட, ஒரே பகுதிக்குள்ளே அடங்குபவர்களாகவே பெரும்பாலும் இருக்கின்றனர். குறிப்பாக தற்போது வடக்கிலும், தெற்கிலும் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்திலே குதித்துள்ளார்கள்.

வடபகுதியைப் பொறுத்தவரையிலே பொங்குதமிழ் நிகழ்வு மூலமாக ஆரம்பித்த பேரினவாத எதிர்ப்புப் போராட்டத்தை யாழ்.பல்கலைக்கழக சமூகம் இன்றுவரை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறது. அண்மையிலும் பேரினவாதத்துக்கு எதிராக வித்தியாசமான முறையிலே போராட்டம் ஒன்றை நடத்திய மாணவர்கள்- இறுதியிலே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கொடும்பாவியையும் எரித்துள்ளனர்.

ஒரு மரணச் சடங்கு போலவே தமது எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தியிருந்த பல்கலைக்கழக மாணவர்கள், பேரினவாதத்தை வன்மையாகக் கண்டித்ததுடன், தமது போராட்டம் இனிவரும் காலங்களிலும் தொடரும் எனத் தெரிவித் துள்ளனர்.

இதேவேளை தென்னிலங்கையிலுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் வீதிக்கு இறங்கிப் போராடும்படி ஜே.வி.பியின் தலைமையின் கீழ் செயற்படும் அனைத் திலங்கை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது. இந்தக் கோரிக்கையை ஏற்று, தென்னிலங்கை பல்கலைக்கழகங்களிலுள்ள ஜே.வி.பிக்கு ஆதரவான சிங்கள மாணவர்கள் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக வீதியிலே இறங்கவுள்ளனர்.

இந்த நிலையானது இலங்கை வரலாற்றைப் பொறுத்தவரையிலே சாபக்கேடானதொரு நிலையாகவே அமையப்போகிறது.

அதாவது - படித்த மட்டங்கள் மத்தியிலே இளம் துடிப்புமிக்க பருவத்திலேயே இனவாத, மதவாத சிந்தனைகளை ஊட்டி, அவற்றை வலுவூன்றச் செய்து, அதனை அரசுக்கு எதிராகவும், முக்கியமாக இன்னோர் இனத்துக்கு எதிராகவும் பிரயோகிக்க முயலுவது, நாட்டை அதல பாதாளத்துக்கு இட்டுச்செல்லும் வழியாகவே அமையும்.

இந்த நிலையைத் தோற்றுவிக்க தென்னிலங்கை மாணவர்கள் வீதிக்கு இறங்குவார்கள் எனில், அதனால் விளையப் போகும் விளைவுகளும் விபரீதமானவையாகவே அமையும். போராட்டங்கள் நடைபெறும் வேளைகளில் தென்னிலங்கை பல்கலைக்கழகங்களிலுள்ள தமிழ் மாணவர்கள் நிச்சயமாக அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். ஆனால் அவர்களையும் போராட்டத்திலேயே பங்குபற்றும்படி வலியுறுத்தப்படும். ஆனால் கணிசமான அளவிலே தென்னிலங்கைப் பல்கலைக்கழகத்திலேயுள்ள தமிழ் மாணவர்கள் சில சந்தர்ப்பங்களில் சிங்கள மாணவர்கள் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கு எதிராக போராட்டங்களையோ அல்லது சுவரொட்டிகளையோ வெளியிட வேண்டிய நிலையும் உருவாகலாம்.

இவ்வாறானதொரு நிலை தோன்றுகின்றபோது, அது இரு மாணவ சமூகங்களுக்கும் மத்தியிலே போராட்டத்தையும், வன்மத்தையும் தோற்றுவித்து, அதனால் மிகவும் பாரதூரமான அழிவுகளுக்கு வழிவகுக்கும். போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் மாணவர்கள் என்ற நிலை வரும்போது கலகங்களும், இனக் கலவரங்களும் தோன்றுவதற்கான வாய்ப்புகளும் உண்டு.

இவ்வாறான நிலைகளைக் கவனத்திற்கொண்டு, தென்னிலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் வீதிக்கு இறங்கும் விடயத்தை அரசு அதிக கவனமெடுத்துக்கொள்ளவேண்டும்.

எவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மட்டத்திலே அதாவது, தமிழ் மாணவர்களை அதிகமாகக் கொண்ட பல்கலைக்கழகங்களிலே விடுதலைப்புலிகளுக்கான மிகப்பெரியதொரு ஆதரவுத்தளம் இருப்பதாகக் கருதப்படுகிறது. அதுபோன்றே தென்னிலங்கை பல்கலைக்கழகங்களிலும் ஜே.வி.பிக்கு ஆதரவுத்தளம் இருப்பதை மறுக்கமுடியாது. அந்தப் பகுதி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்களிலே அங்கத்துவம் வகிப்போர் ஜே.வி.பியின் உறுப்பினர்களாக இருப்பதுடன், அதன் தீவிர ஆதரவாளர்களாகவும் இருக்கிறார்கள். இதனால் ஜே.வி.பியினர் தாம் நினைப்பதை இலகுவாக பல்கலைக் கழக மட்டத்திலே சாதித்துவிடும் நிலை காணப்படுகிறது. இவர்களுக்கு இனவாதப் போக்குக் கொண்ட விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் பின்னணியிலே துணை நிற்கின்றார்கள் என்பதும் மறுக்கப்படமுடியாததொரு உண்மை.



இவ்வாறானதொரு நிலையே வடபகுதியிலும் காணப்படுகிறது எனச் சிலர் விவாதித்துக்கொண்டாலும், இங்கு போராட்ட இலக்கு என்பது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாகவும், மதிப்பளிக்கக் கூடியதாகவும், எல்லாவற்றுக்கும் மேலாக உரிமைப் பிரச்சினையாகவும், அடிப்படைத் தேவையாகவும் உள்ளது. அதனைவிட இன்னொரு இனத்தினுடையதோ அல்லது சமூகத்தினுடையதோ உரிமைகளைப் பாதிக்காதனவாகவும் உள்ளன.

ஆனால் தென்னிலங்கையிலே முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் ஒரு இனத்தின் உரிமைகளையும், அவர்களின் அடிப்படை வாழ்வாதாரங்களையும் சிதைப்பதாகவே உள்ளன. எனவே இந்தப் போராட்டங்களை அனுமதிப்பதோ அல்லது அவற்றுக்கு ஆதரவு அளிப்பதோ மிக மோசமான நிலையையே தோற்றுவிக்கும்.

இது இவ்வாறு இருக்க நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் அல்லது ஒத்திவைக்கப்படலாம் என்ற நிலையும், பொதுக் கட்டமைப்புக்கு அரசு ஆதரவளித்து, அதில் ஒப்பமிடும் நிலை தோன்றினால் அரசிலிருந்து வெளியேறுவோம் என ஜே.வி.பியின் மிரட்டல் - தென்னிலங்கை அரசியற் தளமானது இன்று அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருக்கிறது.

(தொடரும்...)

அரசியற்கட்டுரை... - சுடரவன் -

# நான்காம் கட்ட ஈழப்போர் பலமும் படையுத்தியும்!



(நேற்றைய தொடர்ச்சி...)

வழமையாக இலங்கை இராணுவத்தின் சிறப்புப் படைப் பிரிவுகளால் **(S.F, Commando)** முன்னெடுக்கப்படும் இத்தகைய நடவடிக்கைகளில் இம்முறை பொலிஸ் விசேட அதிரடிப் படையும் **(S.T.F)** இணைந்து கொள்ளும் வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிகிறது.

இவர்களுக்கான இத்தகைய பயிற்சிகள் முதன் முறையாக பொத்துவில் பகுதியில் கடந்த வாரங்களில் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் சிறப்புப் படைப் பிரிவுகளைப் பயன்படுத்தி கொமாண்டோப் பாணியிலான அதிரடித் தாக்குதல்களைப் புலிகளின் முக்கிய இலக்குகள் மீது நிகழ்த்தும் வாய்ப்புகளும் நிராகரிக்க முடியாதவையே.

இந்தச் செயற்பாடுகளில் விமானப்படையும் ஒன்றிணைக்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படலாம்.

இலங்கைப் படைத்துறையினரின் நடவடிக்கைகள் மேற்கண்டவாறு அமையலாம் என எதிர்பார்க்கும் அதேவேளை, தமிழர் தரப்பின் உத்திகள் தொடர்பிலும் சிலவற்றை ஆராய்வது பொருத்தமானது.

தமிழர் தரப்பின் படைத்துறைத் தயார்படுத்தல்களை உற்று நோக்கும்போது, அவர்களும் சிறு குழு நடவடிக்கை தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதாகத் தெரிகிறது. அவர்களின் படைத்துறைப் பயிற்சி தொடர்பாக வெளிவருகின்ற தகவல்களின்படி, ஆழ ஊடுருவும் அணிகள் சிறப்பு அதிரடிப் பிரிவுகள் என்பனவற்றுக்கு தொடர்ச்சியான பயிற்சிகள் நடைபெற்று வருவதை அறிய முடிகிறது.

அத்துடன் சிறப்பு ஆயுதப் பயிற்சி நெறிகளை முடித்து வெளியேறும் அணிகள் தொடர்பான செய்திகளும் வெளிவருகின்றன.



தமிழர் தரப்பைப் பொறுத்தவரை, இந்தமுறை போரை இலங்கையின் சகல பகுதிகளுக்கும் விரிவுபடுத்தும் நோக்குடனான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

இங்கு இலங்கையின் படைத்துறை இலக்குகள் மட்டுமன்றி, பொருளாதார மையங்களும் குறிவைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், யாழ். குடாநாட்டை மீளக் கைப்பற்றும் விடயமானது, விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அதிக முன்னுரிமை அளிக்கப்பட்ட விடயமாக இம்முறை அமையும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

இரு தரப்பினரதும் படைத் துறை உத்திகள் இவ்வாறு அமையலாம் என நாம் எதிர்பார்க்கும் அதே வேளை, பயன்படுத்தப் படவுள்ள போர்க்கல வலுவாற்றல் பற்றியும் சிறிது நோக்குவது பொருத்தம்.

இலங்கை படைத் தரப்பைப் பொறுத்தவரை கடந்த காலத்தில் பயன்படுத்திய போர்க்கலங்களை விட, புதிதாக எதையும் பயன்படுத்தக்கூடிய சாத்தியப்பாடுகள் இது வரை தெரியவில்லை. ஆயினும் அவற்றின் எண்ணிக் கையை அதிகரித்து சூட்டு வலுவை அதிகரிக்க அவர்களால் இயலும்.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரை இம்முறை அவர்களது ஆட்டிலறி சூட்டு வலுவாற்றல் பன் மடங்கு அதிகரிக்கலாம் என நம்பப்படுகிறது. அவர்களது ஆட்டிலறி படைப்பிரிவில் 130 மில்லி மீற்றர் பற்றரிகளும் இணைக்கப்பட்டுள்ளதாக இலங்கை படைத்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் இலங்கை படைத்தரப்பு முன்பைவிட பன்மடங்கு பலமான தமிழர் தரப்பின் சூட்டாற்றலுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும். இருதரப்பினதும் கடற்படைப் பலம் பற்றிக் குறிப்பிடும் **Jane's** பாதுகாப்பு சஞ்சிகை கடந்த காலத்தில் இலங்கை கடற்படையின் கடற்கல பலத்தில் மூன்றிலொன்று அல்லது அரைவாசி அழிக்கப்பட்டிருப்பதாகவும், தமிழர் தரப்பை கடற்படை வலுவாற்றல் பன்மடங்கு அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிடுகிறது.

அத்துடன் இம்முறை தமிழர் தரப்பில் வான்வலு நிச்சயம் ஈடுபடுத்தப்படும் என்பது யாவராலும் இலகுவாக ஊகிக்கக் கூடியதொன்றே. இரண்டு விமானங்கள் என படைத்தரப்பால் கூறப்படுகின்றபோதும், தமிழர் தரப்பின் வான்வலு ஒழுங்கமைக்கப்பட்ட ஸ்குவாட்றன்களை கொண்டதாக இருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அதியுயர் செயற்திறன் மிக்க தற்கொடை அணிகளும் முழு வீச்சுடன் களமிறங்கும் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்க எதிர்வுகூறலேயாகும். இலங்கை அரசும், படைத்தரப்பும் இடம் பெறப்போகும் நான்காம் கட்ட ஈழப்போரைத் தமிழர் தரப்பைப் பலவீனப்படுத்தும் அல்லது பணிய வைக்கும் ஒரு கட்ட யுத்தமாகக் கருதினாலும், தமிழர் தரப்பு இதனை ஒரு இறுதி யுத்தமாகவே முன்னெடுக்கும் என்பதை உறுதியாக எதிர்பார்க்கலாம்.

நன்றி - மட்டக்களப்பு ஈழநாதம்.

# அரசிலிருந்து விலகும் ஜே.வி.பியின் முடிவு! எந்த வித நியாயப்பாடும் இல்லாத ஒன்று!

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

போலிக் கற்பனைகளின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்திலிருந்து விலகிச் செல்வதென ஜே.வி.பி மேற்கொண்ட தீர்மானம் எவ்வித நியாயமான அடிப்படைகளும் அற்றதென ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

சுனாமி நிவாரணக் கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பான ஜே.வி.பியின் நிலைப்பாடு என்ற தலைப்பில், ஜே.வி.பியினர், ஜனாதிபதி சந்திரிகாவிற்கு அனுப்பிய கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையில், ஜனாதிபதி சந்திரிகா ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வாவிற்கு நேற்று மாலை அனுப்பிய கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஜே.வி.பி அரசிலிருந்து வெளியேறும் பட்சத்தில் இடம்பெறும் பயங்கரமான விளைவுகளுக்கு அந்தக் கட்சியே பொறுப்பேற்க வேண்டுமென நான் நம்புகிறேன்.

விடுதலைப்புலிகள் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றக் கூடிய வாய்ப்பை பெற்றிருப்பது அச்சப்படவேண்டிய ஒரு விடயமல்ல. எவ்வித நிபந்தனைகளுமின்றி, விடுதலைப் புலிகள், அரசாங்கத்துடன் இணைந்து ஒன்றாகச் செயற்பட முன்வந்தமை அரசாங்கத்திற்கு கிடைத்த வெற்றியாகும்.

சுனாமி நிவாரண கட்டமைப்பை நிறுவுவதன் ஊடாக, மக்கள் அரசியல் யாப்பிற்கு உட்பட்ட வகையில் வழங்கிய அதிகாரம், வேறொரு அமைப்பிடம் ஒப்படைக்கப்படமாட்டாது. அந்தக் கட்டமைப்பிற்கு அரசியல் யாப்பு ரீதியான அதிகாரங்கள் இல்லை. பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிவாரணப் புனர்வாழ்வு நடவடிக்கைகளைப் பேணுவதற்கு நிறுவப்படும் நிர்வாக செயற்திட்டமே பொதுக்கட்டமைப்பாகும். இந்தக் கட்டமைப்பின் மூலம் தமிழர் தாயகம் அங்கீகரிக்கப்படுவதாகக் கூறப்படுவது, வேண்டுமென்றே மக்களை ஏமாற்றும் பிரயத்தனமாகும்.

பொதுக்கட்டமைப்பின் மூலம் இலங்கையின் நிர்வாக விதிமுறைகளோ, கூட்டுத்தாபன கோவைகளோ மீறப்படமாட்டாது. நாட்டின் இறைமைக்கும், ஐக்கியத்திற்கும், ஆட்புல ஒருமைப்பாட்டிற்கும், குந்தகம் விளைய மாட்டாது.

இலங்கையின் தேசிய நெருக்கடிக்கு அதிகாரத்தைப் பரவலாக்குவதன் மூலம் தீர்வுகாண வேண்டுமென்பதே ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கையாகும். இந்த விடயம் குறித்து ஜே.வி.பியும் இணங்கியுள்ளது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கு இரண்டு வருடகால விசேட செயலணியை உருவாக்கும் யோசனைகளும், முன்னணியின் ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது.

சுனாமி நிவாரணப் பொதுக் கட்டமைப்பும், இவ்வாறான ஒரு செயற்பாட்டையே நிறைவேற்றுகின்றது. தேசிய மட்டக் குழுவில் அரசாங்கம், விடுதலைப் புலிகள், முஸ்லிம்கள் என மூன்று பகுதிக்கும் சம அளவிலான பிரதிநிதித்துவம் உள்ளது. மாவட்ட பிரதேச குழுக்களில் தமிழ் முஸ்லிம் சிங்களப் பிரதிநிதிகள் உள்ளடங்குகின்றனர். அனைத்து இனமக்களுக்கும் வலுவையும், வளங்களையும் பெற்றுக்கொடுத்து சர்வதேச சமூகம் வழங்கும் நிதியுதவிகளை சாதுர்யமான முறையில் பயன்படுத்தி புதிய தேசத்தைக் கட்டியெழுப்பக் கூடிய தேசிய மத்திய நிலையத்தை உருவாக்கும் முயற்சிகளுக்கு தலைமைவகிக்குமாறு ரில்வின்சில்வா விடுத்த வேண்டுகோளை நான் வரவேற்கிறேன்.

விடுதலைப்புலிகளுடன் ஏதோ ஒருவகையில் நட்புறவை ஏற்படுத்தி தேசியப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வுகாண கடுமையாக உழைப்பது இத்தகைய உன்னதநோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கேயாகும்.

தேசிய மத்திய நிலையத்தை ஸ்தாபிப்பதற்கு விடுதலைப்புலிகள் உட்பட அனைவரையும் பங்கேற்கச் செய்யவேண்டும். இதற்காக நான் மேற்கொள்ளும் நடைமுறைச் சாத்தியமான செயற்பாடுகளுக்கு குறுக்கே நிற்காமல் ஒத்துழைப்பு வழங்குவதே சிறந்ததாகும்.

இது போன்றே சுனாமி நிவாரண பொதுக்கட்டமைப்புத் தொடர்பான இறுதித் தீர்மானத்தை மேற்கொள்வதற்கு முன்னர் மகா சங்கத்தினர் உட்பட அனைவருக்கும் முறையாக விளக்கமளிக்கப்படும். நிலைமை இவ்வாறு இருக்கும்போது— ஜே.வி.பி மேற்கொண்ட தீர்மானம் எந்த வகையிலும் நியாயமற்றது என அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.


TAFREN — TASK FORCE FOR REBUILDING THE NATION

ILO

**Post Tsunami Recovery**
**Rapid Income Recovery Framework**
**District Livelihood Units**

TAFREN with the assistance of the International Labor Organization is Facilitating Communities affected by the Tsunami to regain their livelihoods. As part of this initiative District based Units are being established to provide critical services to District and Divisional Committees.

The following opportunities are now available in three districts-

- District Livelihood Coordinators
- Livelihoods Database Officer
- Committee Facilitator / Trainer

Attractive Salary packages are available for these positions to be based in the first instance in Galle, Batticoloa and Jaffna with additional opportunities to be made available in the other Tsunami Affected Districts.

Eligibility criteria and detailed job Descriptions are available on the TAFREN website or by contacting Olinka Berenger.

E mail: Olinka@tafren.gov.lk Telephone: 2426161
Website: www.tafren.gov.lk

*Please submit written applications on or before 22th June 2005.*

Livelihood Section
TAFREN
21 Janadhipathi Mawatha, Colombo 01.

(C/4204)



Alliance Francais de Jaffna
83, Palaly Road,
Kantharmadam,
Jaffna.
Phone:- 021-2228093
E-Mail:- afjsl@hotmail.com

ALLIANCE FRANCAISE DE JAFFNA
யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகம்
வழங்கும்
**FRENCH FILM FESTIVAL**

**பிரெஞ்சுத் திரைப்பட விழா**

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

சனிக்கிழமை 18 ஜூன்
- **The Children of Paradise** (கறுப்பு வெள்ளை, 1944)

புதன்கிழமை 22 ஜூன்
- **Cinema Paradiso** (வர்ணம் 1985)

சனிக்கிழமை 25 ஜூன்
- **The Migratory People** (வர்ணம் 2001)
(உலகப் பறவைகள் பற்றிய விவரணத் திரைப்படம் அனைத்து வயதினருக்கும் ஏற்றது)

புதன்கிழமை 29 ஜூன்
- **Dialogues of the Carmelite Nuns** (ஒபேரா வகை, வர்ணம் 1999)

சனிக்கிழமை ஜூலை 02
- **The Son** (வர்ணம் 2002)

இடம்:- கைலாசபதி கலையரங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நேரம்:- தினமும் பிற்பகல் 4 மணிமுதல் 7 மணி வரை

அனைத்தும் ஆங்கில உப தலைப்புக்களுடனான பிரெஞ்சுத் திரைப்படங்கள்.

அனுமதி இலவசம்

அமைப்பாளர்கள்,
பிரெஞ்சு நட்புறவுக் கழகம்,
83, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மொழியியல் ஆங்கில சமூகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(1951)



**மனோகரா** யாழ்ப்பாணம்

ஸ்ரீகாந்த், கோபிகா, விவேக் நடித்த கனா கண்டேன்

ஜூன் 17 முதல் அதிரடி வெளியீடு!
சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி, சார்லி ஆகியோரின் சிறந்த நடிப்பில்



**அந்நியன்**
**anniyan**

இசை:- ஹரிஸ் ஜெயராஜ் இயக்கம்:-சங்கர்

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

விஜயகாந், மீனா, நம்பியார் மற்றும் பலர் நடித்த

**சேதுபதி I.P.S**

பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்

காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

**ராஜா** யாழ்ப்பாணம்

ரத்குமார், நெப்போலியன், தேவயானி, விவேக் நடித்த

**தென்காசிப் பட்டணம்**

17 முதல் கற்க கசடற

பு.நே: 10.30, 2.30, 6.30 மட்டும்

**நாகம்ஸ்** சுன்னாகம்

ரமேஷ், பூஜா, சரத்குமார் நடித்த



**ஜித்தன்**

காட்சிகள்:- 11.00,3.00, 6.00 (பழைய நேரம்)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

இன்டி பென்டன்ஸ் டே
டைரக்டர் ரோலண்ட் எம்ரீக் மீண்டும்
முத்திரை பதிக்கும் படைப்பில்

**THE DAY AFTER TOMORROW**

நாளை மறுநாள் (தமிழாக்கம்)
சுனாமி போன்ற அழிவுகளை சித்தரிக்கும்

காட்சிகள்
புதிய நேரம்:- 10.30,2.30,6.30,9.30


## சிறு விளம்பரம்


### புதிய புத்தகம்

விற்பனையில் சாதனைசெய்த 'இது இந்துமதம்' நூலின் ஆசிரியர் 'சாமிஜி' எழுதிய புதிய புத்தகம் 'கோயில் பூசைகள் தமிழாக வேண்டும்' விலை ரூபா 80/= பரணன், 138, ராசாவின்தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி:- 2222365

(1199)

### ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். **T.P - 0779122836** நேரம்: காலை 9.00 - 8.30 வரை

(1198)



**தேவை**

தொலைத்தொடர்பு நிலையத்திற்கு (பெண்) தொலைபேசி இயக்குநர் தேவை.

தொடர்புகளுக்கு:

**தில்லையம்பதி தொலைத்தொடர்பு சேவை**
**பலாலி வீதி,**
**கோண்டாவில் கிழக்கு.**
T.P.: 021 222 2488, 021 222 5710

(4206)



அல்வாய், தினைப்புனம் (மயிலிட்டி) ம.கணேசலிங்கம் தே.அ.அ. இல: 42 177 2118 V ஆகிய நான்...

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்றிக், வடமராட்சிப் பகுதி, கட்டைவேலிக் கோயிற்பற்று, அல்வாய் இமையாணன் குறிச்சியிறை 'வரணன்' நிலபர 10 5/8 எல்லை கிழக்கு தாதோதரம்பிள்ளை சுப்பிரமணியத்திற்கும் மறு பெயருக்கும் உரிய ஆதனம் வடக்கு இராமுகைம்பெண் குஞ்சுப்பிள்ளைக்கும் மறுபெயருக்கும் உரிய ஆதனம் மேற்கு ஒழுங்கை தெற்கு கோணப்பர் வேலுப்பிள்ளைக்கும் மறுபெயருக்கும் உரிய ஆதனம் இவ் எல்லைக் குட்பட்டவைகளில் சொரியலாய் ஆறிலொரு (1/6) பங்கிற்கு 08.03.1982 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு பொ.குமாரசுவாமி அத்தாட்சிப்படுத்திய 1067ம் இலக்க சாதனத்தால் நான் சொந்தமும் உரித்தும் உடையவன். இக்காணியில் கூட்டுப் பங்காளராகிய எவரும் தங்கள் பங்குகளை விற்க நேரிடின் தேசவழமைச் சட்டத்தின்படி எனக்கு முன்னுரிமை தந்து இக்காணியில் சொந்தமில்லாத அன்னியவருக்கு விற்க வேண்டாம் என்று வேண்டுகிறேன்.

உர்ஜிதப்படுத்தப்பட்டது
சட்டத்தரணி.

திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன்
சமாதான நீதவானும் பிரசித்தநொத்தாரிசும்
சத்தியப்பிரமாண ஆணையாளர்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

தகவல்:
ம.கணேசலிங்கம்,
தினைப்புனம், அல்வாய் (சி/4205)



**கண்ணீர் அஞ்சலி**



**டாக்டர் மயில்வாகனம் இராசையா**
(புங்குடுதீவு)

அரசினர் மாவட்ட வைத்தியசாலை பொறுப்பதிகாரியும், வைத்தியசாலை அபவிருத்திச்சங்க செயலாளருமான டாக்டர் மயில்வாகனம் இராசையா அவர்களின் திடீர் மறைவு செய்திகேட்டு பெரும் அதிர்ச்சியடைந்துள்ளோம். அன்னாரின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

புங்குடுதீவு
அரசினர் மாவட்ட வைத்தியசாலை
அபிவிருத்தி சங்கம்.

(C/4203)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# பதவி வெறி பிடித்த அரசியல்வாதிகளை மகா சங்கத்தினர் வழிநடத்தக்கூடாது!

## அபயராஜ பிரிவெனாவின் தலைவர் கோரிக்கை

கொழும்பு —

பௌத்த பிக்குகளின் ஒழுங்கீன மற்ற - ஆத்திரமூட்டும் வன்முறைப் போக்கை மகா சங்கம் கண்டிக்க வேண்டும். அத்துடன், பதவி வெறி பிடித்த அரசியல்வாதிகளை மகாசங்கம் தவறாக வழிநடத்தக்கூடாது என்று சிறி அபயராஜ பிரிவெனாவின் தலைவர் ஹப்பொல பிலிமத்தலாவ பண்டித் மொரகொல ஜீவரட்ண நாயக்க தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் -

ஓமல்பே சோபித தேரர் கண்டியில் உண்ணாவிரதம் இருந்த போது, வர்த்தக நிறுவனங்களை மூடச்சொல்லி மக்களின் இயல்பு வாழ்க்கையை பௌத்த பிக்குகள் சீர்குலைத்தனர். அரசுடன் மோதலை ஏற்படுத்தி அராஜகப் போக்கைக் கையாண்டு வருகின்றனர்.

பௌத்த பிக்குகளின் இந்த ஒழுங்கீனமற்ற, ஆத்திரமூட்டும் வன்முறைப் போக்கை மகா சங்கம் வன்மையாகக் கண்டிக்கவேண்டும்.

சில பௌத்த பிக்குகளின் போக்குகள் புத்தரின் போதனைகளுக்கு முரணாகவே உள்ளன.

ஆட்சியாளர்களுக்கு அறிவுரை கூறி அவர்களைச் சரியான பாதையில் நல்வழிப்படுத்துதலே புத்தர் போதிக்கும் கொள்கை. ஆனால், வன்முறையைக் கையாளுமாறு புத்தர் கூறவில்லை.

பொதுக்கட்டமைப்பின் உள்ளடக்கம் குறித்து எதுவும் தெரியாமலேயே மக்களுக்கு இன்னல்களை பௌத்த பிக்குகள் ஏற்படுத்தி வருகின்றனர்.

சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்துகிறோம் என்ற பெயரில் நாட்டில் அமைதியை சீர்குலைத்து வன்முறைகளுக்குத் தீ மூட்டியுள்ளனர்.

இந்தப் போக்குகள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கவைதான். சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளின் உறுதுணையோடு அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களின் ஆதரவோடு சில பௌத்த பிக்குகள் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தங்கள் சந்தர்ப்பவாத செயற்திட்டங்களைச் செயல்படுத்த பேரினவாத உணர்வுகளைத் தூண்டிவிடும் இந்த அரசியல்வாதிகளின் சதித் திட்டங்களை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அது குறித்தும் தான் மக்களுக்கு அப்போது தெரியாது. ஆனால் அப்போது இந்த பௌத்த பிக்குகள் என்ன செய்தார்கள்? யாராவது சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்களா? பேரணிகள் நடத்தினார்களா? ஏன் அவர்கள் அப்போது வர்த்தக நிறுவனங்களை வற்புறுத்தி மூடும்படி கூறவில்லை.

பதவிவெறி பிடித்த அரசியல்வாதிகளை மகாசங்கம் தவறாக வழிநடத்தக்கூடாது என்று வேண்டுகோள் விடுக்கின்றேன். நாட்டைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள் என அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளார்.

## கேணல் சொர்ணம் நேற்று திருகோணமலை திரும்பினார்!

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் நேற்றுக்காலை விமானப்படை ஹெலிகொப்டர் மூலம் திருகோணமலைக்குச் சென்றார்.

கிளிநொச்சியிலிருந்து நேற்றுக் காலை 9 மணியளவில் புறப்பட்ட இவரை -

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு, வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் தளபதிகள், போராளிகள் வழியனுப்பி வைத்தனர்.

கிழக்கிலிருந்து வன்னிக்கு வந்த புலிகளின் முக்கிய தளபதிகளுக்கான ஹெலி வசதியை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு கடந்த சில வாரங்களாக அரசு இழுத்தடித்துவந்தது. இதனையடுத்து விடுதலைப் புலிகளின் தளபதிகளின்



கிழக்குப் பயணத்துக்கு அரசு ஏற்பாடுகளை மேற்கொள்ளாவிடின் புலிகள் சுயபாதுகாப்புடன் வான், கடல், தரை வழிப் பயணங்களை மேற்கொள்ள நேரிடுமென்று புலிகள் எச்சரித்திருந்தனர்.

இதையடுத்து கண்காணிப்புக்குழுவினருக்கும் பாதுகாப்பு அமைச்சுப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கிணங்கவே மீண்டும் போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டது.

## கிளைமோர் வெடித்ததில் 2 பொலிஸார் படுகாயம்!

வவுனியா —

வவுனியா செட்டிக்குளம் - பறையனாலங்குளம் வீதியில் 29 ஆம் மைல் கல்லில் சோதனைச் சாவடியொன்றில் கிளைமோர்க் குண்டு வெடித்ததில் இரண்டுபொலிஸார் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை 9.15 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் கொன்ஸ்டபிள்களான பிறேம குமார, தீப்தி ஆகியோரே காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சோதனைச்சாவடி பகலில் மட்டுமே இயங்குவதெனவும், இரவில் பொலிஸார் இல்லாத சமயமே அங்கு கிளைமோர் பொருத்தப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

## அரசின் செயலைக்...

துவேசம்?, அன்பைப் பொழியவேண்டிய பிக்குகள் போர்ப் பிரகடனம் செய்கிறார்கள், ஹெல உறுமயவே சீறாதே புலி சீறினால் என்ன நடக்கும்?, பிக்குகளே இனவாதக் கொள்கைகளை மறந்துவிடு போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை தாங்கியவாறு மக்கள் அடையாள உண்ணாவிரத்தில் ஈடுபட்டனர்.

நேற்று மதியம்வரை நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் நடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

போராட்ட முடிவில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ், வெளிநாட்டு தூதுவர்கள் ஆகியோருக்கு மகஜர்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

இந்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக சாவகச்சேரி சந்தை, வர்த்தக நிலையங்கள் என்பன மூடப்பட்டிருந்தன.

மேற்படி போராட்டத்தை தென்மராட்சி வணிகர் கழகம் ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது. (தீ-29)

## அரசிலிருந்து விலகியது...

ஆளும் கூட்டணி அரசிலிருந்து வெளியேறுவது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படும்.

அத்துடன் புதிய கூட்டணி தொடர்பாகவும் இந்த செய்தியாளர் மாநாட்டில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பியின் முடிவை மாற்றுமாறு பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்தபோதும் - அதற்கு ஜே.வி.பி. இணங்கவில்லை.

நேற்று மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்து கட்சியின் நிலைப்பாடு தொடர்பாக சோமவன்ச அமரசிங்க விளக்கமளித்ததாகவும் தெரியவருகிறது.

அரசிலிருந்து ஜே.வி.பி. விலகியதை - அந்தக் கட்சியின் காப்பு இணையத்தளம் நள்ளிரவே உறுதிப்படுத்தியது.

இதேவேளை ஜே.வி.பி. இதுவரை வகித்துவந்த நான்கு அமைச்சுப் பதவிகளிலிருந்தும் விலகுவதாகத் தீர்மானித்துள்ளது. இந்த அமைச்சுக்களிலும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் கடமைபுரியும் உத்தியோகத்தர்களிடம் இன்று முற்பகல் பிரியாவிடை பெற்றுச் செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (01 - தே)

## புத்தூர் கொலை...

ஆகிய இருவருக்கும் எதிராக சட்டமா அதிபரால் யாழ். மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு கடந்த புதனன்று ஜூரிசபையின் முன்பாக மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சாட்சியாளர்கள் கடந்த ஆறு தினங்களாக விசாரணை, குறுக்கு விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

தொடர்ந்து நேற்று யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ் வரதராஜா தொகுப்பை வெளியிட்டார்.

தொடர்ந்து பூதத்தம்பி முருகானந்தம், பூதத்தம்பி மகேந்திரம் ஆகிய இருவரும் இந்த வழக்கில் குற்றச் சாட்டுப் பத்திரத்தின் முதலாவது குற்றச்சாட்டிற்கு அமைய குற்றவாளிகள் என்று ஜூரிசபை ஏகமனதாக வழங்கிய தீர்ப்பை இந்த நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது. அதன் பிரகாரம் இவர்கள் இருவருக்கும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு ஜனாதிபதியால் நிர்ணயிக்கப்படும் ஒரு தினத்தில் அவரால் கூறப்படுமிடத்து தூக்கிடப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்படும் என தீர்ப்பளித்தார்.

இதேவேளை ஜூரி சபையினர் பாரிய சமூகப்பொறுப்பை நிதானத்துடன் செய்தபணிக்காக அரசாங்கத்தின் சார்பாகவும் நீதிமன்றத்தின் சார்பாகவும் நீதிபதி நன்றி தெரிவித்தார்.

இந்த வழக்கில் அரச தரப்புச் சட்டவாதியாக சுகந்தி கந்தசாமியும் எதிரிகள் சார்பாக சட்டத்தரணி மு.சபாநாதனும் ஆஜராகியமை குறிப்பிடத்தக்கது.

## வட்டிவீதம் உயர்வடைந்தது!

கொழும்பு —

இலங்கை மத்திய வங்கி நேற்று முதல் வட்டி வீதங்களை அதிகரித்துள்ளது. 8.25 வீதமாக உள்ள வட்டி வீதத்தினை 9.75 வீதமாக அதிகரிக்க மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இந்த வருடத்தில் இரண்டாவது தடவையாக இந்த வட்டிவீத அதிகரிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

## இன்று...

என்றும் எந்தத் தேர்தல் நடந் தாலும் ஜே.வி.பி அதற்கு தயாராக உள்ளது என்றும் தெரிவித்தார்.

## பகிரங்க...

குமாரதுங்கவின் ஆலோசகர்கள் அவருக்குத் தவறான வழிகாட்டுதலை வழங்குகிறார்கள். அவர் பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திட முடிவு செய்ததற்கு அவ ரது ஆலோசகர்களே காரணம்.

பொதுக்கட்டமைப்பு முடிவை கைவிடாவிட்டால் அரசிலிருந்து வெளியேறுவோம். பொதுக்கட்டமைப்பு நாட்டின் இறையாண்மைக்கு எதிரானது.

இதில் கையெழுத்திடுவதற்காக தன் உயிரையும் கூடத் தியாகம் செய்யத்தயாராக இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார்.

கடந்த தேர்தலில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற அவர் உயிர்த் தியாகம் செய்ய வேண்டும்.

அரச தொலைக்காட்சி பக்கச்சார்புடனேயே - ஜனாதிபதியின் குரலையே வெளிப்படுத்துகிறது. பொதுக்கட்டமைப்புத் தொடர்பான நேரடி விவாதத்துக்கு ஜனாதிபதி முன்வருவாரா என்று அவர் கேள்வி எழுப்பினார்.

### சந்திரிகா - ரணிலை

## புனித தந்த வழிபாட்டுக்கு அனுமதிக்கக்கூடாதாம்!

### தேசப்பற்று இயக்கம் கூறுகிறது

கொழும்பு —

ஜனாதிபதி சந்திரிகா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் ஆகியோரை தலதா மாளிகையிலுள்ள புனிததந்தத்தை வழிபட அனுமதிக்கக்கூடாது என்று தேசப்பற்று தேசிய இயக்கம் கோரியுள்ளது.

மகரகம இளைஞர் சேவை மன்ற மண்டபத்தில் நடத்திய நிகழ்வொன்றில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் எல்லே குணவன்ச தேரர் பேசும்போதே இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கும் போது -

பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடுவது தொடர்பாக பலமுறை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை வலியுறுத்திய பின்னரும் அவர் கேட்பதாகத் தெரியவில்லை.

மகாநாயக்கர்களின் உத்தரவை அவர் மதிக்கவில்லை. எனவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் தலதா மாளிகையிலுள்ள புத்தர் புனிததந்த வழிபாட்டுக்கு மகாநாயக்கர்கள் தடைவிதிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு - அம்பாறை...

சேர்ந்த 24 வயதுடைய பொன்னையா சந்திரபவான் என்பவர் கொல்லப்பட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் ஆரையம்பதியில் உள்ள முருகன் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தபோது பழைய கல்முனை வீதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

9.மி.மி ரக பிஸ்டலால் இந்தக் கொலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 3 துப்பாக்கிச் சன்னங்கள் இவரது உடலைத் துளைத்துள்ளன.

கொலையுடன் தொடர்புடையவர்கள் இதுவரை இனங்காணப்படவில்லையென காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். இவர் ஈ.பி.டி.பி. ஆதரவாளர் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை கல்முனையில் தனியார் பஸ் நிலையத்தில் நேற்றிரவு 3.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலியாகினார்.

மினிபஸ் நிலையத்தில் நேரக் கணிப்பாளர் கலில் என்பவரும் அவரும் உதவியாளருமான ரவீந்திரன் என்பவருமே பலியானவர்களாவர். எனினும் இந்த துப்பாக்கிச் சூட்டுக்கு என்ன காரணம் என்பது குறித்து இதுவரை தெரியவரவில்லை. (01)

## பொலிஸார் தூக்கி...

கும் தம்பர அமிலதேரருக்கு மல்வத்தை மகாநாயக்கர் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

எனினும், அதனை ஏற்க மறுத்த அமிலதேரர் - ஜனாதிபதி இதுபோன்ற உறுதிமொழிகளை இதற்கு முன்னரும் வழங்கியிருப்பதால் இதனை ஏற்க முடியாதென்றும் பொதுக்கட்டமைப்பு யோசனை முழுமையாகக் கைவிடப்படுமென ஜனாதிபதி உறுதியளிக்கும் வரை இந்த உண்ணாவிரதப் போராட்டம் தொடருமென்றும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் - உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் தம்பர அமிலதேரரை பொலிஸாரும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரும் அந்த இடத்திலிருந்து நேற்று மாலை 6.30 மணிக்கு அகற்றினர்.

மோசமான உடல்நிலைக்கு உள்ளாகியிருந்த அவரை பொலிஸார் அம்புலன்ஸ் மூலம் கொண்டுசென்று வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இதனையடுத்து அந்த இடத்தில் பதற்றநிலை ஏற்பட்டது. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தம்பர அமிலதேரர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்

## இளையதம்பி பொன்னம்பலம்

(கிளாக்கர்)

மருதடி வீதி, சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த இளையதம்பி பொன்னம்பலம் (கிளாக்கர்) 14.06.2005 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், தபோநிதி,சிறிதரன்,பாஸ்கரன்,சிறிரங்காதரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாவகச்சேரி வடக்கு,* — தகவல் :
*மீசாலை* (இ) குடும்பத்தினர்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.06.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.